www.tamilarangam.net


Restaurant
HARSANA'S
23 rue Perdonnet
75010 Paris
Tél. 01 40 05 08 36

# விழுது

# V I L U T H U

Restaurant
PRASSA
54 RUE LOUIS BLA
75010 Paris
Tél. 01 53 26 39 4

,jo; 01 fiy ,yf;fpa khj ,jo; 30 nrg;lk;g



PHONE 2000
LES PROFESSIONNELS DE LA TELEPHONIE A VOTRE SERVICE
SFR
Siva :
0620211111

Chiquita
chiquita
24 rue Cail

1er site d'information en Français pour les Tamouls
Paris தமிழ்

208 Rue Fg st Denis
75010 Paris
01 46 07 43 80
M°: Gare du nord
SHALINI

Food focus
JAFFNA BOUCHERI
B
70 Rue Louis Blanc

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடிக்கொரு தடவை மணி பார்க்கும் இளைஞனே!

உன் முயற்சியின் வெற்றிக்காகக் காத்திருக்கின்றாயா?

இல்லவே இல்லை.

சாலையோரத்தில் மின் கம்பங்களை சாய்ந்த கோபுரமாக்கியதில் உன் பங்கு பெரும்பங்கு.

கைத்தொலைபேசியை காதில் வைத்தால் பிரெஞ்சுமொழியில் நீ இலக்கியவாதி.

எதை நோக்கி நீ பயணம் செய்கின்றாய்?

உனக்கே தெரியாதபோது நாமென்ன பிரபஞ்ச ஞானிகளா, உன்னைக் கண்டு கொள்வதற்கு?

அன்பானவர்களே எச்சரிக்கை!

பத்து எண்களில் உங்கள் வாழ்க்கையைத் தேடாதீர்கள்.

கல்லறை வாசமும் வரலாற்றுப் பக்கங்களும் அழிந்து போனதாக வரலாறே இல்லை.

அன்பானவர்களே!

முடிந்தால் தமிழ் சமுதாயம் காத்திருக்கிறது உங்களைத் தூக்கிவிட.

தெருவில் தூங்கிவிட எண்ணாதீர்கள்.

இளம் சமுதாயத்தின் சமுத்திர உணர்வுகளை சாலையோரத்தில் புதைக்காதீர்கள்.

உங்களின் தேடல்களுக்கும் நாளைய நம்பிக்கைகளுக்கும் 'விழுது'வின் கலைமேடையில் கைகோர்த்துக் கொள்ளுங்கள்.

புலம்பெயர்வாழ்வின் விழுது உணர்வுகளை வெளிப்படுத்தும் முகமாக புதிய கலைஞர்களை உருவாக்கி வளர்த்துவிடும் நோக்கிலும் கலையுணர்வு உள்ளவர்கள் தம்மை வெளிப்படுத்திக்கொள்ளும் ஒரு ஊடகமாகவுமே 'விழுது' இயங்குகிறது.

'விழுது' என்பது மதச் சார்புமல்ல, அதன் அங்கத்தவர்களுக்கு வாழ்வியல் முறை என்று எதையும் வழங்கி தோலில் பச்சை குத்திவிடவுமில்லை.

'விழுது'வின் அங்கத்தவர்களின் 24 மணிநேர நடவடிக்கைகளுக்கும் 'விழுது' பொறுப்பாகவும் முடியாது.

காலத்தின் கடுமையில் வெறுமைக்குள் விழுந்து எமது இளையவர்கள் தொலைந்துபோய்விடுவார்களோ என்ற பதைபதைப்பில் அவர்கள் கலைஞர்களாகப் புறப்படும்போது அவர்களுக்கு மேடையாகவே ஆக விரும்புகிறது விழுது.

-நிர்வாகம்-

www.tamilarangam.net

# புரிந்துணர்வு + அன்பு = வாழ்க்கை

**நிரஞ்சனா**



வாழ்க்கையை நேசி, வாழ்க்கையை சுவாசி என்றெல்லாம் கவிஞர்கள் மொழிகையில், வாழ்க்கையை யாசிக்கும் அவலம் நிறைந்த பல பெண்கள் எமது சமுதாயத்தால் உருவாக்கப்பட்டு, உள்ளடங்(க்)கிய உணர்வுகளுடன் உலா வருகின்றனர். இந்த நிலவுகள் தேய்வதைப்பற்றியோ வளர்வதைப்பற்றியோ யாருக்கும் அக்கறையில்லை. அனுதாபமும் இல்லை.

இவர்களது மௌனக் குமுறல்களை வாசிக்கத் தெரிந்த "மனிதர்"கள் இல்லாமலில்லை. அவர்களிற்கூட, ஒரு சிலரைத்தவிர மற்றவர்கள் வெளிப்படையாகத் தமது கருத்துக்களைக் கூறத் தயங்குகின்றனர். இப்பெண்கள் இச்சூழ்நிலைக்குத் தள்ளப்பட்ட காரணத்தை ஆராயப் பலர் பலமாய் மறுக்கின்றனர். 'விதிவரைந்த பாதை' என்று வேதாந்தம் பேசுகின்றனர்.

பிடித்தோ பிடிக்காமலோ கட்டியவனுடன் வாழவேண்டிய நிர்ப்பந்தம் பெண்களுக்குத் திணிக்கப்பட்ட இதே சமுதாயத்தில்தான், வாழ்க்கை வாழ்வதற்கே என்ற மனநிலை கொண்ட ஆண்வர்க்கமும் சுதந்திரமாய் வாழ்கிறது. தனிமனித சுதந்திரம் என்றால் என்னவென்று சுருங்கக்கூறின், ஒரு ஆணோ, பெண்ணோ தமது கருத்துக்களை பேச்சுக்களாகவோ, எழுத்துக்களாகவோ வெளிக்கொணரும் உரிமையுடனும், செயற்படும் உரிமையுடனும் உண்மையிலேயே மனோரீதியாக சந்தோசமாக, அமைதியாக வாழும்போது அவர்கள் சுதந்திரமாக வாழுகின்றனர் என்று கொள்ளலாம்.

சீதனத்தீயில் இளமையெல்லாம் எரிந்து போக, முதிர்கன்னியாய் வாழ்வைக் கழிக்கும் (சாபம் பெற்ற) பெண்கள் ஒருபுறமிருக்க கனவுகளுடன் கல்யாணம் செய்துகொண்டு, விழுந்து நொருங்கிய கண்ணாடியாய் ஆசைகள் சிதறிப்போன பெண்களிடையேதான், விதியே என்று உள்ளே அழுது வெளியே நடிக்கும் பெண்களும், வெளிகளைத் தாண்டிப் பறக்க நினைக்கும் சிறகுள்ள சில பறவைகளும், பறக்க எண்ணியும் பந்தபாசங்கள், போலிவாதங்கள், அச்சுறுத்தல் என்பனவற்றால் சிறகுகள் பிணைக்கப்பட்ட பரிதாபப் பறவைகளும் உள்ளன. இவற்றைவிட மனம்போல் வாழ்வமைந்த அதிஷ்டசாலிகளும் உண்டு.

கற்பனையில் விரிந்த வாழ்க்கைக்கும், கண்முன்னே தெரிந்த வாழ்க்கைக்கும் இடையிலான அகன்ற வெளிதான் பல பெண்களின் வாழ்வைப் பலியாக்கியது என்ற எண்ணம் பொதுவாகப் பலரிடையே உண்டு.

கற்பனையில் விண்வெளியில் கோட்டை கட்ட ஆசைப்படுபவர்களாக மிகச்சிலர் இருந்தாலும், அன்பின் அத்திவாரத்தில், பாசத்தின் சுவர்களால் பலப்படுத்தப்பட்ட குடிசையையே பெரும்பாலும் பெண்கள் விரும்புகிறார்கள்.

யதார்த்தவாழ்வில் ஒரு மனைவி தன் கணவனிடமோ, இல்லை, கணவன் மனைவியிடமோ எதிர்பார்க்கும் மிகக் குறைந்த பட்ச விருப்பங்கள் நிறைவேற்றப்படாதவிடத்து அவற்றை மனம்விட்டுப் பேசி ஒருவருக்கொருவர் புரிந்து கொள்ளாதபோது, ஒருவர் தேவையை, விருப்பு வெறுப்புக்களை மற்றவர் அறிந்துகொள்ளாதவிடத்து, அவர்களிடையே ஏற்படும் சிறுபிரிவு நாளடைவில் பெரும் பிளவாகிவிடுகிறது. இம் மனவிரிசல் விவாகரத்துக்கு வழிகோலுகிறது.

இங்கு பிரச்சினை கற்பனையல்ல. எதிர்பார்ப்பு. மனங்களுக்கிடையிலான புரிந்துணர்வு, புரிந்துணர்வுடன் கூடிய அன்பு. அன்புப் பிணைப்புடனான பாதுகாப்பு, அந்தப் பாதுகாப்புத் தரும் பலம்.

கணவன் மனைவியை இணைக்கும் களமாக கண்களுக்குத் தெரியாத நுண்ணிய உணர்வுகளால் பிணைக்கப்பட்ட ஒரு மிக மென்மையான புரிந்துணர்வுப் பாலம் இருக்குமிடத்து


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ““பிரச்சினைகள் எல்லாவற்றிற்கும் பிரிவுதான் தீர்வல்ல. ஆனால், பிரச்சினைகளைப் பொறுத்துத் தற்கொலையைத் தவிர்ப்பதற்காகவும், சீரழிவுகளைத் தடுப்பதற்காகவும் பிரியலாம்.””

அவர்களிடையே பிரச்சினைகள் எழுவதில்லை. இங்கே அன்பு மதிக்கப்படுகிறது. அவரவர் உணர்வுகள் மதிக்கப்படுகிறது. ஆதிக்கம் இல்லாத விட்டுக்கொடுப்பு நிகழ்கிறது. இன்பத்தைப் போலவே துன்பத்தையும் இருவரும் பகிர்ந்து கொள்ளும்போது சுமைகள் குறைகிறது. இதனால் வாழ்வு இனிக்கிறது. ஆனால் இப்படி வாழ்க்கை எத்தனைபேருக்கு அமைகிறது. அந்த அதிஷ்டசாலிகளைக் கேளுங்கள். அவர்கள் வாழ்க்கையை நேசிக்கின்றார்கள்; சுவாசிக்கின்றார்கள்; வாழ்க்கையை வாழுகின்றார்கள்.

“நான் அவளுக்கு என்ன குறை வைச்சன்? காசு பணம் இல்லையா? புதுசு புதுசா சேலை நகை நட்டு இல்லையா? எது இல்லை?” என்று கேட்கும் ஆண்களைக் கண்டிருக்கி றோம். அதேபோல் இவைதான் வாழ்வதன் சுவை என்றோ, சுகமான சொர்க்கம் என்றோ வாழும் பெண்களும் இல்லாமல் இல்லை. ஆனால் எல்லாப் பெண்களினதும் ரசனையும் அல்லது ஈடுபாடும் இவைதான் என்றில்லாதபோதுதான் பிரச்சி னைகள் தொடங்குகின்றது; தொடர்கின்றது.

அன்பாய் ஒரு வார்த்தை, ஆசையாய் ஒரு பார்வை, செல்ல மாய் ஒரு சீண்டல், இயலாத பொழுதில் பரிவாய் உதவி, துன்பத்தின்போதுகூட சாய்ந்து கொள்ளத் தோள், தென்றலின் சுகம் தரும் சின்னச் சின்ன ஸ்பரிசங்கள், ஆயிரம் பேரிடை யேயும் மௌனத்தில் ஒரு தனிமொழி, பிறந்தநாளை மறக்காத வாழ்த்து... இப்படி எவ்வளவோ.... ஒவ்வொரு செய்கையிலும் மௌனமாய் காதல் மீண்டும் மீண்டும் ஜனிக்கும். வான்பரப்பைத் தாண்டி வளரும். மனங்களிடையே இறுக்கமான, தளரமாட்டாத ஆழமான உறவுப் பிணைப்பு ஏற்படும். இந்த சுகம் அலாதியா னது. ஆனந்தமானது, இதமானது, ஈடில்லாதது என எண்ணுப வர்களுக்குப் பணத்தைக் கோடிகோடியாய் கொட்டிக் கொடுத் தாலும் மனதில் சந்தோசமோ, துணையுடனான நெருக்கமோ வந்துவிடப் போவதில்லை.

ஏனெனில் இது ஒரு உணர்வு, சொல்லிப் புரியாதது. இறக்கைகளின்றி மெதுவாய் காற்றில் மேலெழுவதுபோல் ஒரு சுகம். இங்கு காமத்துக்கு இடமில்லை. களங்கத்துக்கு இடமில்லை. தாயின் அரவணைப்பை, பிறந்த மழலையின் சிரிப்பை, நீரின் குளிர்மையை, தென்றலின் தழுவலை என உலகின் இன்பங்கள் எல்லாம் ஒன்றாய்க் கலந்து ஊற்றாகும். இவ்வுணர்வில் மூழ்கி எழும் சுகம் அனுபவித்துப் புரிய வேண்டும்.

அதேபோல் பணமும் ஆடம்பரமும்தான் வாழ்க்கை என்று நினைப்பவர்களுக்கு இந்த அன்புத் தீண்டலின் அல்லது தேடலின் ஆழம் புரியுமோ என்பதும் தெரியவில்லை.

இரு மனங்களினதும் விருப்புக்கள் ஒன்றாய் இருந்து விட்டால், சலனமின்றி ஓடும் ஆற்றுநீராய் அமைகிறது வாழ்வு. வேறுபட்ட மனவிருப்புக்கள் கொண்டவர்கள் இணைகையில் வாழ்வுச் சுழற்சி மாறி, அநியாயமாய் இருவரின் மனஅமைதியும் சிதைந்துவிடுகிறது. சிலவேளைகளில் ஆறு தன் கரைகளை உடைத்தும் கொள்கிறது.

கடனே என்று சிலர் வாழ்ந்தாலும் மிகுந்த மன அழுத் தத்தால் அவதியுறுகின்றனர். சிலர் வாழ்வதாய் நினைத்து நாளாந்தம் செத்துக்கொண்டிருக்கின்றனர். சிலரது வாழ்வு தற்கொலையில்கூட முடிகிறது. மாறாக ஒரு சிலர் துணிச்சலுடன் வாழ்க்கைப்பாதையை மாற்றுகின்றனர். புதிதாய் வாழ ஆசைகொண்டு புதிய துணையைத் தேடுகின்றனர்.

உள்ளே எரிமலையாயும், ஊர்உலகத்தின் முன் பனிமலை யாயும் வாழ்ந்தவர்கள் ஒரு நாள் கொதித்து எரிமலைக் குழம்பாய் எல்லைகள் தாண்டும்போது தூற்றப்படுகின்றனர். சொல்லம்புகளால் சல்லடையாக்கப்படுகின்றனர். ஏளனப் பார்வைகளால் எரிக்கப்படுகின்றனர்.

தம்மை அறிவாளிகளாயும்(?) சமூகத்தின்பால் அக்கறை உள்ளவர்களாயும் காட்டிக்கொள்ளும் பலர் கூடிப்பேசும்போது “கொழுப்பு” என்பர். அவளையே அறிந்திராதவர்கூட கொச்சையாய் பாலியல் பிரச்சனைதான் காரணமென்று அடித்துச் சொல்வர். வாய்க்கு அவலாக அவளை அரைத்த பின்பாவது பாலியல் பிரச்சினைகூட ஏன் வருகின்றது என்ற ஒரு கேள்வியை நீங்கள் உங்களிடமே கேட்டதுண்டா? நிதான மாய் ஒரு நிமிடம் சிந்தியுங்கள். ‘புரிந்துணர்வு இல்லை’ என்பதுதான் பதிலாகக் கிடைக்கும்.

ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே உடலமைப்பு, உடற்கூறுகள் போல் உடல், உள உணர்வுகளும் வித்தியாசப் படுவதை அறிந்தும்கூட அதைப்பற்றிக் கவலை கொள்ளாதவர் களாலும், இவைபற்றிய அடிப்படை அறிவுகூட இல்லாதவர் களாலும் எப்படி மனைவியின் மனஉணர்வுகளைப் புரிந்து கொள்ளமுடியும்? எத்தனை குடும்பங்களில் கணவன் மனைவி யிடையே உடல், உளரீதியான விருப்பு வெறுப்புக்கள் கலந்து பேசப்படுகின்றது அல்லது ஒருவருக்கொருவர் மற்றவரின் விருப்பு வெறுப்புக்களை ஆசை, அபிலாஷைகளை அறிந்து செயல்படுகின்றனர். கணவன் மனைவியிடமோ அல்லது




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மனைவி கணவனிடமோ நம்பிக்கையாய் எதையும் பேசலாம், கேட்கலாம் என்னும் தைரியம் புரிந்துணர்வின் மூலம் மட்டுமே உருவாகிறது. புரிந்துணர்வு இல்லாத இடத்தில் பயம் வருகிறது. பயம் அவர்களை மனோரீதியாக நெருங்கவிடாது தடுக்கின்றது. இதனால் அன்புத்தளை அறுபடுகின்றது. அன்பினால் ஆட்கொள்ளப்படாததனால் வெறுப்பு உண்டா கின்றது. வெறுப்பு விபரீதத்தில் முடிகின்றது.

இருட்டில் இருவரின் உடல் இச்சைகளைத் தீர்க்கவும், இனவிருத்திக்கும்தான் பாலியல் உறவு என்ற கருத்து இருக்கும் மட்டும் கணவன் மனைவியிடையே ஆழ்ந்த நேசத்தையும் நம்பிக்கையையும் முக்கியமாகப் புரிந்துணர் வையும் இந்த உறவு பலப்படுத்தும் எனும் கருத்தை எத்தனை பேர் ஏற்றுக் கொள்வார்கள்?

உணர்வுகள் பகிர்ந்து கொள்ளப்படவேண்டியவை, பரிமாற்றம் செய்துகொள்ளப்படவேண்டியவை. ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளாதபோது இது எப்படிச் சாத்தியமாகும்.

வாழ்க்கையை நேசிப்பதற்கும், வாழ்க்கையை வாழ்வதற் குமே மனிதனுக்கு ஆறாவது அறிவு படைக்கப்பட்டிருக்கிறது. வாழ்வில் இழந்த ஒரு நாள் என்ன, ஒரு விநாடி கூடத் திரும்பக் கிடைக்கப் போவது இல்லை. நூறுவயதிலும் வாழ்வு இருக்கிறது. புரிந்துகொண்ட வாழ்வு இனிக்கிறது. உண்மை தான். ஆனால், இழந்த இளமை, வாழ்வைத் தொலைத்த நாட்கள் திரும்பப் போவதில்லை.

"எல்லாம் இழந்துவிட்டேன். காலம் கடந்துவிட்டது. இனி என்ன வாழ்க்கை?" என்பவரிடையேதான், இழந்த வாழ்வைக் கூட இனிவரும் எஞ்சிய நாட்களில் இனிதாக்க ஆசைப் படுபவர்களும் இருக்கிறார்கள். காலத்தால் அழிந்துபோன வாழ்வின் சுகங்களை மீட்டுத் தரும் சக்தி காலத்திற்கு இருக்கின்றது. வலிகளை மாத்திரமன்றி வடுக்களையும் அழித்துவிடக்கூடிய சக்தி மிக்கது காலம்.

ஆனால், காலமும் எல்லோர் வாழ்க்கையிலும் ஒரே மாதிரி யாகச் செயற்படுவதில்லை. கிணற்றினுள் நீந்தமுடியாது அவதிப்படுவரைத் தூக்கி, ஆழ்கடலினுள் இரக்கமின்றி வீசிவிடும் அவலமும் நடக்கிறது. பிரச்சினைகளுக்குத் தீர்வு தேடப் புறப்பட்டு இன்னும் அதிக பிரச்சினைகளில் சிக்கி உழலும் நிலைக்குத் தள்ளப்பட்டவர்களது வாழ்வு பரிதாபமாக சோகத்திலேயே முடிகிறது. அவசரம், பிரித்தறிய முடியாத் தன்மை, அதீத (தன்)நம்பிக்கை, ஆதரவற்றநிலை என இப்பிரச்சினைக்கான காரணிகள் வேறுபடுகின்றன. இப்படிப் பலவீனமான ஒரு பெண்ணின் நிலைமையை சாதகமாய் பயன்படுத்திக்கொள்ளும் விஷஜந்துக்களும் நம்மிடையே உண்டு.

"பிரச்சினைகளுக்குப் பிரிவுதான் முடிவா? எங்கு பிரச்சினை யில்லை" என்று கேட்கிறார்கள். பிரச்சினை இல்லாமல் வாழ்க்கை இல்லை. உண்மைதான். பிரச்சினையே வாழ்க்கை யானால்....? புரிந்துகொண்ட துணையுடன் ஊடல் கூட சுகம்தான். புரிந்துகொள்ளாதவருடன் கூடல்கூடக் கொலைதான். வாழ்வின் ஒவ்வொரு விநாடியும் வலி சுமந்து கழியும் கஷ்டம் சொல்லிப் புரியாது. அந்த நரகத்தில் உழல்பவரைக் கேளுங் கள். துயரத்தில் கழியும் பொழுதுகளையும், தூக்கம் தொலைந்து கண்ணீரில் கரையும் இரவுகளையும்பற்றி அவர்கள் சொல்லுவார்கள்.

குடி, தீய பழக்கங்கள், பெருமளவு வயது வித்தியாசம், படிப்பறிவு, வாழ்க்கைத்தரம் அல்லது அந்தஸ்து, இயந்திரமயமான வாழ்வு என்பன எல்லாவற்றையும் விட புரிந்துணர்வு இன்மையே குடும்பங்களில் பிரச்சினையைத் தோற்றுவிக்கின்றது.

சிலபேர் "உன் கணவன் குடிப்பதில்லை, அடிப்பதில்லை, இவ்வளவு அப்பாவியாய் இருக்கிறாரே" என்பர். புரிந்துணர்ந்து வாழும் ஒருவன் எப்போதாவது குடித்துவிட்டோ அல்லது கோபத்திலோ அடித்துவிட்டாலும் நிதானமானவுடன் அந்த வலிக்கு அவனே ஆறுதலான ஒத்தடமாக நிவாரணியாக இருக்கிறான். இவ்வலியும் ஓரிரு நாளில் மறைந்துவிடக்கூடும்.

ஆனால் புரிந்துணர்வின்றி நாளும் விஷவார்த்தைகளால் ஆன்மாவைக் குத்திக் குதறும் சித்திரவதை, அது தரும் வேதனை, அதனால் உண்டாக்கப்படும் விரக்தி என நாளாந்தம் உயிரைச் சிதைத்துவிடும் கெட்டித்தனம் மிக்க "அப்பாவிகள்" பலர் இருக்கிறார்கள்.

புரிந்துணர்வு இல்லாத இடத்தில் சந்தேகம் முளைக்கிறது. இது இருக்கும் கொஞ்ச சந்தோசங்களையும் விழுங்கிவிட்ட பின்பு, எங்கிருந்து வரும் அன்பு? எப்படி வரும் ஒற்றுமை?

இதுவே புரிந்து கொண்ட துணைக்காக அந்த அன்பில் நனைந்து, காதலில் உருகி, கற்பனையில் வாழ்ந்து ஆண்டுக் கணக்கில் அவனு(ளு)க்காகக் காத்திருக்க முடிகிறதே.

இந்தக் காத்திருப்பு புரிந்துணர்வோடு கூடிய காதலால், அன்பால் மாத்திரமே கனப்படுத்தப்படுகிறது. இங்கு இது நம்பிக்கை எனும் பெயர் கொள்கிறது. இதுவே வாழ்வின் ஆதாரம் ஆகிறது. இந்த ஆதாரம் அழியும்போது பிரச்சினைகள் ஆரம்பமாகின்றது.

பிரச்சினை உள்ளவர்கள் எல்லாம் பிரிந்துவிட்டால் அல்லது

## சமுதாயத்திற்கு....

விழுந்து நொருங்கிய
கண்ணாடிப் பாத்திரமாய்
எனது உணர்வுகள்!
மிகக் கவனமாய்
கூட்டியள்ளிக்
குப்பையிற் போட்டாற்கூட
கவனம் சிதறுகையில்
கண்ணையே குத்திவிடுவதாய்!

என் இதயத்தில் இரத்தம்
வழியும்போது
ஏனென்று கேட்காதவர்கள்
கேட்கக்கூடாதென்று
இருப்பவர்களுங்கூட
கண்ணை (என்னை) இழந்தபின்
நிச்சயமாய் வீசுவர்
ஒரு ஏளனப்பார்வை.

உக்கிப் போயிருக்கும்
என்னை.
இவர்கள் பார்வை
எரித்துக்கூட
விடக்கூடும்
இருப்பினும்
உங்கள் மனம்
உங்களை உதைக்கும்
எனது (இ)எந்த முடிவும்
உங்களிடத்தேயிருந்தே
என....

www.tamilarangam.net

## போலிவாதம்

அவளின் பெற்றோரிடம் அவள் சொன்னாள்:

*"மனதில் கொஞ்சமும் நிம்மதியில்லை,*
*சந்தோசமில்லை. புரிந்துணர்வு*
*இல்லாதவரிடம் விரக்தியும்,*
*வேதனையுமாய் ஒரு வாழ்க்கை - இது*
*வேண்டாம்.*
*எனக்கு விவாகரத்து வேண்டும்"*

பதிலளித்தாள் அன்னை:

*"அம்மா குழந்தை, ஊரில் எல்லோரும்*
*நீ சந்தோஷமாய் வாழ்வதாய்*
*நினைத்துக் கொண்டு இருக்கிறார்கள்.*
*அவர்கள் எண்ணத்தை*
*வீணடித்து விடாதே*
*சகித்துக்கொள்!"*

புதிய துணைதேடிக் கொண்டால் தமிழர் பண்பாடு சீரழிந்து போகும் என்பவர்களுக்கு ஒன்று கூறியாக வேண்டும். உங்களது இப்படியான பொறுப்பில்லாத பதில்கள்தான் பலரிடையே தவறுகளையும், ஒழுக்கச் சீரழிவுகளையும் உண்டாக்குகிறது. முறையாகப் பிரிந்து, முறையாக ஒரு துணையைத் தேட அனுமதிக்கப்படும்போது இச்சீரழிவு தடுக்கப்படுகின்றது. மனித உணர்வுகள் எல்லாம் ஏதோ ஒரு வடிகால் தேடி ஓடும் வெள்ளம் போன்றது. சரியான வடிகால் கிடைக்காதபோது அது தடம் புரள்கின்றது.

புரிந்துணர்வு இல்லாத சிலரிடம் கொஞ்சம் பேசி உண்டாக்கலாம். இது ஒரு சிலரிடையே மட்டும் சாத்தியம். பலருக்கு மண்டையைப் பிளந்து உள்ளே செருகினாலும் பயனளிக்காது. அவர்கள் பிரிந்துவிடுவதுதான் அவர்களுக்கும் நல்லது. ஒழுக்கம் பேண விரும்பும் சமூகத்துக்கும் நல்லது.

பிரச்சினைகள் எல்லாவற்றிற்கும் பிரிவுதான் தீர்வல்ல. ஆனால், பிரச்சினைகளைப் பொறுத்துத் தற்கொலையைத் தவிர்ப்பதற்காகவும், சீரழிவுகளைத் தடுப்பதற்காகவும் பிரியலாம்.

கணவன் மனைவியிடம் மாத்திரமன்றி, பெற்றோரிடம், பிள்ளைகளிடம், நண்பர்களிடம் என புரிந்துணர்வின் தேவை வாழ்வின் எல்லைகளைத் தாண்டிப் பரந்து விரிந்து செல்கிறது. மற்றவர்களின் பிரச்சனைகளின் இரு பக்கங்களையும் ஆராய்ந்து பார்க்கக் கூடியவன், புரிந்து கொள்ளக்கூடியவன் "மனிதம்" நிறைந்தவன் ஆகின்றான்.

வாழ்வின் துயரமான கறுப்புப் பக்கங்களை மூடிவிட்டு புதிதாய் வாழ்க்கைப் பக்கங்களைப் புரட்ட ஆசைப் படுபவர்களை கேலிக்குரியவர்களாக்காது வாழ்த்திப் பாருங்கள். நீங்கள் மனிதத்தை வாழ்க்கையைப் புரிந்து கொண்ட உணர்வு, ஆத்மசுகம் உங்களுக்குக் கிடைக்கும்.

புரிந்துணர்வு என்பது பூவின் இதழை விட, தழுவும் தென்றலை விட மென்மையான ஒரு சுகம். அவன்(ள்) என்னை முழுமையாய்ப் புரிந்துள்ளான்(ள்) அல்லது நான் அவனை(ளை) முழுமையாய்ப் புரிந்துள்ளேன் என்பதைவிட, இருவரும் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு அன்போடு வாழுகின்றோம் எனும் எண்ணமே எமை மேகத்தில் அமர்த்தி ஊஞ்சலாட்டும். உலகத்தின் இனிமையெல்லாம் இணைந்து தாலாட்டும். இந்த அற்புதமான சுகம் அனுபவித்தவர்களுக்கு மட்டும்தான் புரியும். முயன்று பாருங்கள். நேற்றுவரை எரிமலையாய் இருந்த உங்கள் வாழ்வுகூட இன்று முதல் தென்றலாகலாம்.



## இணையவனே

**அல்வையூர் கோமதி**

*வா*
*என் தோழனே வா*
*உன் புன்னகை*
*மீண்டும் ஒரு முறை — என்னை*
*பூக்கச் செய்யட்டும்*

*உன்னை துரத்தி துரத்தி*
*காதலித்தவள் கேட்கிறேன்*
*இன்று தொடக்கம்*
*என்னை நீ துரத்து — உன்*
*பாதத்தில் நான் மிதிபட வேண்டும்*

*வலிக்கட்டுமே*
*அதனாலென்ன — உன்*
*உள்ளங்கை — என்*
*உடல் தடவி மயிர் சிலிர்க்கும்*

*வா காதலனே வா — உன்*
*இளமைப் பிடியில் — என்*
*இடுப்பொடியட்டும்*
*உன் கண்ணிமை*
*என் கன்னங்கள் தடவட்டும்*
*கல்லோடு ஒரு புல்லின் விளையாட்டு*
*மீண்டும் மீண்டும் முடிந்து தொடங்கட்டும்.*

*கண்ணோடு வந்து*
*இதயம் வரை சென்று*
*உயிராகக் கலந்தவனே*
*உனக்கில்லாத உரிமையா?*

*என்ன வேண்டும்?*
*என்னை வேண்டுமா கேட்காதே எடு*
*என்னுடையதெல்லாம்*
*உனக்காகத்தானே பூத்திருக்கிறது*
*பூப்பறிக்க கொடியென்ன தடையா*

*ஏ! என்னவனே*
*இது கவியல்ல காதல்*
*உயிர் சொல்லும் வரிகள்*
*உதட்டுவழி வந்தது*

*காதல் நம்மை ஆளுமை செய்யட்டும்*
*காதல் அடிமைகளாய் நீயும் நானும் சிறையிலிருப்போம்.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தாயே.... நீயா!!!



**திருச்செல்வம்–திலீபன்**
**(நோர்வே நக்கீரனார்)**

கலகலப்பாகப் புலரவேண்டிய மதனின் குடும்பத்தில் காலைப்பொழுது கனத்த சோகத்துடன் புலர்ந்தது. கொஞ்சி விளையாட வேண்டிய கடைசிப் பிஞ்சுக்குழந்தை கத்திக்கொண்டிருக்கிறது.

"இரஞ்சி!!! தங்கச்சி அழுகிறது கேக்கேல்லையோ? நீ மூத்த பிள்ளை...., பதினாறு வயசாச்சு, குடும்பப்பொறுப்பு என்றால் என்ன எண்டு இன்னும் தெரியாது. எங்கடை காலத்திலை உந்த வயதிலை குடும்பத்திலை பிடிச்சுக் குடுத்திடுவினம். நாளைக்கு குடும்பம் எண்டு வந்திட்டால் சமைக்கத் தெரியாது. பிள்ளை பாக்கத் தெரியாது. போய் தங்கச்சியைத் தூக்கு" என உரத்த குரலில் விழுமியங்கள் விட்டுப் போகும் நிலையைக் கொட்டித் தீர்த்தாள் தாய் விஜயா.

"தங்கச்சியவையும் இருக்கினம்தானே எனக்குத்தான் எந்த நேரமும் அர்ச்சனை. சமைக்கிறதும் பிள்ளை பராமரிக்கிறதும் தான் பெண்களுக்குத் தொழிலோ? பெண்கள் எல்லாம் விளையாட்டில் இருந்து விண்வெளிவரையும் ஆண்களுக்குச் சமமாக வீரசாதனைகள் புரியத் தொடங்கிவிட்டார்கள். அம்மா நீங்கள் இன்னும் ஆண்களுக்கு அடிமையாக இருக்கும் பதினெட்டாம் நூற்றாண்டுப் பெண்ணாகத்தானே இருக்கிறீர்கள்"

எமது சமூகத்தில் மூத்த பிள்ளைகள் எல்லாம் முதுகில் குடும்ப பாரத்தையும் பெற்றோரின் விரகதாபங்களையும் சுமக்கப் பிறந்தவர்கள்தானே. பின்னால் பிறந்தவர்கள் செய்யும் பிழைகளையும் பெற்றோரின் பிழைகளையும் சேர்த்துத் தண்டனை பெறுவது மூத்த பிள்ளைகள்தான். உபசார அறையின் (ஹால்) சாளரத்தருகே சிந்தனையை எங்கோ சிறகடிக்க விட்டிருந்த தந்தை "இரஞ்சி" எனக் கர்ச்சித்தார். காடு அடங்கினால் போல் மயான அமைதி நிலவியது.

அமைதியை மெல்லக் கலைக்கிறாள் விஜயா. "இஞ்சருங்கோ... கோவிக்காமல் யோசிச்சுச் சொல்லுங்கோ.... கருவைக் கட்டாயம் கலைச்சுத்தான் ஆகவேணுமே? நாலோடை ஐஞ்சா வளத்திட்டுப் போறது."

"நீ சொல்லுவாய் மூத்தவளுக்குக் கல்யாணவயது வந்துவிட்டுது. அவள் பிள்ளைப் பெறுகிற வயதிலை எண்டால் ஊர் என்ன சொல்லும். நீ சுகமாய்ச் சொல்லிப் போட்டாய். பிறக்கிறதும் பெண்ணாப் பிறந்தால்...? நீங்கள் சுமக்கிறது பத்துமாதங்கள் மட்டும்தான். நாங்கள் சுமக்கிறது கடைசிக் கட்டையிலை போகும் வரைக்கும். ரூபாயிலை கேட்ட சீதனம் நாலு, ஐந்து மடங்காக்கி குரோணிலை டொலரிலை பவுண்சிலை ஐரோப்பாக் காசுகளிலை கேட்கினம். இதுகளுக்கெல்லாம் என்ன செய்கிறது."

"இதையெல்லாம் நீங்கள் முதலே யோசித்திருக்கவேணும். மருந்து மாத்திரை எண்டும், உறைகள் எண்டும் ரீவியிலை வெக்கமில்லாமல் விளங்கப்படுத்துறாங்கள். இதுகளையெல்லாம் பார்க்காதையுங்கோ. கெட்ட படங்களை, அடுத்த நாள் வேலை எண்டும் பாராமல், இருந்து பார்த்துப்போட்டு சாமம் தாண்டி வந்து என்னை எழுப்புங்கோ...."

"இப்ப கதைக்கிற கதையே கதைக்கிறாய். அங்கை பார் கதவுக்கருகிலை இரண்டு கால்கள் தெரியுது."

"இரஞ்சி பெரியவை நாங்கள் கதைக்கிறது உங்களுக்குத் தேவையில்லை. வாய் பார்த்த குடி வாழாது எண்டு என்ரை பாட்டி நெடுகலும் சொல்லுவா. கவனிக்க வேண்டியதைப் போய்க் கவனி." எனத்தாய் மிரட்டினாள்.

புறாவுக்குப் பெட்டியடித்தால்போல் இருக்கும் வீட்டுக்குள் குட்டிக்குட்டி அறைகள் வேறு. பெற்றோரைச் சுற்றித்தான் பிள்ளைகளும் படுத்துத் தூங்குவார்கள். பெற்றோர் தமது அந்தரங்கமான கதைகளை செயல்களை எப்படிச் சுதந்திரமாகச் செய்யமுடியும். எமது சமூகம் குடும்பம், கலாச்சாரம், கட்டுப்பாடு, கற்பு எனத் தம்மை சுற்றிக் கல்லறைகளை எழுப்பி உணர்வுபூர்வமாய் தானும் வாழ்ந்ததில்லை, மற்றவர்களையும் வாழவிட்டதில்லை. தாம்பத்தியம் என்பதுகூட தம்பதிகள் தனியாக அனுபவிப்பதற்காக ஆண்டவனால் தரப்பட்ட வரம். இதை எல்லோரையும்கூட வைத்துக்கொண்டா செய்யமுடியும்? சுற்றி வரப் பிள்ளைகள், சுற்றம் சூழல் எனத் தங்குவதற்குப் பலர். திட்டமிடப்படாக் குடும்பம் விழுமியங்களை இறுகப் பற்றிக் கொள்வதிலும் பணத்தை தேடிக் கொள்வதிலுமான அக்கறை, சீர்தூக்கிப் பார்க்கப்படாத சிந்தனைகள், தங்கி வாழும் தன்மை - இவற்றுள் கட்டுண்டு திணறும் ஒரு சாதாரண தமிழ்க்குடும்பம்தான் இது.

"எத்தனையோ சனம் பிள்ளை இல்லை எண்டு அழுகுதுகள். நீங்களோ சொந்தப் பிள்ளையைக் கொல்லு எண்டு நிக்கிறியள். இன்னும் இரண்டு மணித்தியாலங்கள் கிடக்கு. இப்பவும் நாங்கள் முடிவை மாத்தலாம்." விஜயா கணவனின் கண்களைக் குத்தி அவன் இதயத்துள் உண்மையையும் உணர்வுகளையும் தேடினாள்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"முடிவிலை மாற்றம் எதுவும் இல்லை விஜயா... நாங்கள் பார்க்காத பிள்ளை பார்க் காமலே இருக்கட்டும். இதுவும் பெண் என்றால் ஒன்றும் செய்ய ஏலாது. உப்பிடித்தான் மூன்றாவது பெட்டையாப் பிறக்கேக்கை முத்தமெல்லாம் முத்து எண்டாய். இப்ப நாலுடன் ஐந்து என்கி றாய்.... இல்லை விஜயா கலைக்கத்தான் வேணும்"

"கருக்கலைக்கேக்கை என் உயிருக்கே ஆபத்து வரலாம். பேந்து எல்லா பெட்டைக் குஞ்சு களையும் நீங்கள்தான் வைத்துப் பார்க்க வேண்டி வரும். கருக்கலைப்பை தடுப்புமுறையாக நினைக் கிறியள் போலை கிடக்கு. ஒரு பிள்ளை வயிற்றில் உருவாகும்போது உள்ளும் புறமும் என்னுள் ஏற்படும் மாற்றங்களை உங்களால் உணர முடியாது. உணரவைக்கவும் முடியாது. இஞ்சை பாருங்கோ, வயித்திலை உதைக்குமாப் போலை கிடக்குது. என்னைக் கொல்லப் போகிறாயா தாயே என்று கேட்குமாப் போலை கிடக்கு."

"கருவைக் கலைக்காமல் இருக்கிறத்துக்கு இரண்டு மாதத்திலை பிள்ளை உதைக்குது எண் டும் செத்துப்போவன் எண்டும் ஏன் பொய் சொல் லுறாய். நீ என்ன சொன்னாலும் சரி கருவைக் கலைத்துத்தான் ஆகவேணும்



வேறைவழியில்லை."

அவளுக்கு வேறு வழியில்லைத்தான். வாழவந்து வாயடைத்துப் போனவள். சொந்த உணர்வுகள் செத்துப் போனவள்.... இல்லை, கலாச்சாரக் கல்லறைகளுக்குள் சாகடிக்கப்பட்டவள். அடுக்களையும் கட்டிலுமாக காலத்தைக் கழிப்பவள். இவளுக்கு வேறுவழியில்லைத்தான்.

ஒன்றரை மணித்தியாலங்களின்பின் மருத்துவமனையில் கருவைக் கலைப்பதற்காய் கணவனும் மனைவியுமாகக் காத்திருக்கிறார்கள். நீண்ட மௌனம்.... விடை காணாக் கேள்விகள். இந்த மௌனப் போராட்டத்தை மெல்லக் கலைத்தாள் விஜயா.

"இன்னும் அரை மணித்தியாலங்கள் கிடக்கு. இப்பகூட நிப்பாட்டலாம்... என்ன சொல்லுறியள்... சொல்லுங்கோவனப்பா.... மரம் மாதிரி இருக்கிறியள். என்ரை குடும்பத்திலை என்னைத் தவிர பொம்பிளைப் பிள்ளையள் கிடையாது. உங்களுக்குச் சகோதரிகளே கிடையாது. எங்களுக்குத்தான் ஆண்டவன் ஏன் இப்பிடிப் பெட்டை பெட்டையாக் கொட்டித் தள்ளுகிறானோ தெரியாது."

மனைவியின் பக்கம் திரும்பி முறைத்துப் பார்த்தபடி பல்லை நெருடிக்கொண்டு "முடிவிலை மாற்றம் கிடையாது. அக்கம் பக்கத்திலை ஆக்கள் இருக்கினம். மைக்குப் போட்டுக் கதை. நாளைக்கு ரோட்டிலை நடக்கேலாது. அந்தத் தூமையைக் கொண்டுபோய்த் துடைச்செறிஞ்சு போட்டுவா. மறு பேச்சு வேண்டாம்" என மறுபக்கம் திரும்பிக் கொண்டான்.

ஊருக்காக, உலகுக்காக என பொய் வாழ்க்கை ஒன்றை வாழ்ந்து முடிக்கும் இந்த விழுமியத் தொடர் என்று அறுக்கப்படும்? கண்ணீர் முத்துக்கள் கரைந்தோடி வார்த்தைகளை வெளிவிடாது அவள் வாயை ஒட்டிக் கொண்டன. இந்த மௌனப் போராட்டத்தை மெல்லக் கலைத்தது அந்த அழைப்பு "விஜயா மன்மதகோபன்... விஜயா மன்மதகோபன்..."

கல்போல் இருந்த கணவனை பரிதாபத்துடனும் ஏக்கத்துடனும் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி போகிறாள். மன்மதகோபனின் மன்மதலீலைகளுக்கு அடிமையாகி ஆணாதிக்க விழுமிய விலங்கிட்டவள் தன் பிள்ளையையே கொல்லக் கொலைக்களத்துக்குக் கொண்டு போகிறாள். கடைசியாக சத்திரசிகிச்சை அறையுள் நுழையும்போதுகூட ஒரு தடவை திரும்பிப் பார்க்கிறாள். அந்தப் பார்வை கெஞ்சுகிறது. அவன் முடிவில் மாற்றம் இருக்காதா? கல்நெஞ்சம் கரையாதா? அந்தப் பார்வைக்குள் எத்தனை கேள்விகள். கண்ணீரால் தன் வயிற்றைக் கழுவியபடி "என்னை மன்னித்து விடு என் மகளே.... என்னை மன்னித்து விடு" என்று மன்றாடிக்கொண்டு டாக்டர் எனப் பட்டம் பெற்றுக் கத்தியுடன் நிற்கும் கொலைகாரக் கூட்டத்தினுள் நுழைந்தாள். மயக்க மருந்து ஏற்றப்படுகிறது. அவள் வயிற்றில் இருப்பது மகள் என்பதை உள்ளுணர்வு உணர்த்தியது. " மகளே என்னை மன்னித்து விடு, மகளே என்னை மன்னித்து விடு...." சொல்லிக்கொண்டே இருக்கிறாள். மயக்கஊசி வேலைசெய்ய அவள் குரல் ஒடுங்கி ஓய்ந்து அடங்குகிறது.

மனைவியின் வருகைக்காய் காத்திருக்கும் கணவனின் மனதில் ஒரு பயம். மனைவியின் அந்தக் கடைசிப் பார்வை அவனைச் சித்திரவதை செய்தது. மனச்சாட்சி கேட்கத் தொடங்குகிறது.

"நீ ஓர் கொலைகாரன். கொலைக்கு உத்தரவிட்ட கொலைகாரன்"

"கண் காணாததை நான் செய்யாததை எப்படிக் கொலை என்பாய்"

"குழந்தையை உருவாக்க மூலமும் முதலுமாய் இருந்தவன் நீ. சொந்தப் பிள்ளையையே கொலை செய்யத் துணிந்த நீ எந்தக் கொலை யையும் செய்வாய். கொலை வெறிபிடித்த பாதகனே போ. போய்த்தடு. ஆண் என்றால் வளர்க்கத் தயாராக இருக்கும் நீ, பெண்பிள்ளையாய் இருக்கும் என்று கொல்லத் துணிந்துவிட்டாய். நிறுத்து அந்தக் கொலையை நிறுத்து"

பிரமை பிடித்தவன்போல் சுற்றுமுற்றும் பார்க்கிறான். எல்லோரும்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவனைப் பார்ப்பது போன்று உணர்ந்தான். மெல்ல எழுந்தவன் மீண்டும் அமர்ந்துகொண்டான்.

"என் ஒவ்வொரு குழந்தையும் ஆண்குழந்தை எண்டு சாத்திரம் சொன்னாலும் எனக்குப் பிறந்த அனைத்தும் பெண் குழந்தைகள்தானே"

"பெண்குழந்தையாய் இருக்கட்டுமே. அதில் என்ன தவறு. ஆண்மாதிரி வளர்த்துவிடு. சீதனம் கொடுக்கமாட்டேன் என்று சபதம் எடுத்துக்கொள். அழகு என்பதை அள்ளி வைத்திருக் கும் பிள்ளைகளுக்கு எதற்கடா சீதனம். அந்த அழகும் அன்பும்தானடா சீதனம். உன் பெண்களை உன் மனையாள் போலல்லாது சுயமாகச் சிந்திப்பவர்களாக, எந்த முடிவையும் சுயமாக எடுக்கக்கூடியவர்களாக, தமது தேவைகளைத் தாமே பூர்த்தி செய்யக்கூடியவர்களாக, புத்திசாலிகளாக தங்கி வாழத் தன்மையில்லாதவர்களாக, ஏமாற்றுக்கு எடுபடாதவர்களாக, அன்புள்ளவர்களாக வாழ்வை இரசிக்கப் பழக்கு. ஆண் உலகம் அவள் காலடியில் அடங்கிக் கிடக்கும் சீதனம் சிதறிப் போகும்."



"அப்படி ஒருவரும் இவர்களைக் கல்யாணம் கட்ட வராவிட்டால்"

"மடையா!! கல்யாணம் கட்டிய வர்கள் மட்டும்தான் வாழ்கிறார் களா? உனது மனைவி வாழ்கி றாளா? அவளை வாழத்தான் விட்டாயா? கட்டிலில் மட்டும் கட்டிக் கொள்வதற்கான தயாரிப் புத்தான் கல்யாணம் என்றால் அது வாழ்க்கையில்லை. அன்பில் ஒன்றி வாழ்வதற்குக் கல்யாணம், காட்சி, பத்திரிகை, மோதிரம், ஐயர், போதகர், இமாமி, தாலி இவைகளெல்லாம் தேவையு மில்லை. இவையனைத்தும் சமூகத்தில் உங்களைக் காட்டிக்கொள்ளும் வடிவங்களே தவிர இவைதான் வாழ்க்கை யல்ல. மனிதத்தை மதிக்கப் பழக்கு, அன்பாய் இருக்கப் பழக்கு"

"எல்லாத்தையும் பழக்கலாம். எப்படி அன்பாய் இருக்கப் பழக்கிறது."

"முதலில் நீ அன்பாய் இரு. பிள்ளைகளைத் திருத்துகிறாய் என்று அடி உதை போடாதே. பிரச்சினைகளை இருந்து கதைத்து விளங்கப்படுத்து. கதைத்துத் தீர்க்கும் பழக்கமோ, கலாச்சாரமோ என்றும் உங்களிடம் இருந்ததில்லையே. காசுமட்டும் வாழ்க்கையாகாது. பிள்ளைகளுடன் இருப்பதற்கு என நேரத்தை ஒதுக்கு."

"இப்ப என்ன செய்யச் சொல்கிறாய்"

"உன் பிள்ளையைக் கொலை செய்ய அனுப்பிவிட்டு என்னையாடா கேட்கிறாய் பாதகா! நிறுத்து சிசுக்கொலையை நிறுத்து போ.... போ...."

பித்துப் பிடித்தவன்போல மதன் ஓடுகிறான். "நிறுத்துங்கள். கொலையை நிறுத்துங்கள்" சுற்றி நிற்போர் யாரையும் அவன் கவனிக்கவில்லை. வெறிகொண்டு சத்திர சிகிச்சை செய்யும் அறைக்கதவை உடைக்க முயல்கிறான். வாயில் காவலர் களால் நிறுத்தப்பட்டு மீண்டும் பழைய இடத்தில் கொண்டு வந்து இருத்தப்படுகிறான்.

☛☛☛☛☛

அம்மா!!!

பாசம், பரிவு, நேசம், உறவு, உணர்வு, அன்பு எல்லாமே ஒன்றாக அமைந்ததால்தானே அம்மா என்று அழைத்து, ஆண்டவன் தாயின் வயிற்றில் பிள்ளைகளை வளர விடுகிறான். இப்படிப் பெருமைக்குரிய தாயே நீ பேயாகலாமா? ஆக்கும் சக்தியைக் கொண்டவளே உன் சிசுவை அழிப்பதற்கு உடன் பட்டாயோ? நான் செய்த பாவம் என்ன தாயே? உன் உதிரத் தில் உருவானதா? உன்னைப் பார்க்கத் துடித்ததா? உன்னுடன் வாழ நினைத்ததா? சொல் தாயே சொல். இரக்கமில்லா அரக்கியாக மாறியது ஏன்?

நீ சிரிக்கும்போது சிரிக்கிறேன். நீ அழும்போது அழுகிறேன். உன் இன்ப துன்பங்களில் உணர்வுகளில் ஒன்றி உறவாடும் என்னை அழிக்க நினைக்கிறாயே அம்மா!!! மாசற்றவள் மாதா என்றார்களே நீ மாசுபடலாமா? தன் ஊனுக்கும் உதரத்துக்கும் உணவில்லாமல்விட்டாலும் உதிரத் தையே உருக்கி பாலாய் ஊற்றும் உத்தமித் தாயே என்னையேன் கொல்ல முயன்றாய். தூய்மை என்ற புனிதம் பூவுலகில் இல்லாவிடில் பேயும் பூதமும் வாழும் நரகக்கூடாகத்தான் பூமி இருந்திருக்கும். நீயோ தாய்மை யையே கொல்ல முயன்றாயே தாயே... ஏன்... ஏன்?

என் முகத்தைப் பாராமல் அரும்பிலே அறுத்தெறிய நினைக்கும் அன்னையே கேள்!!! விதைப்பதில் ஏற்படும் விந்தையான இன்பத்துடன் தந் தையின் தயவு முடிந்து விடுகிறது. எம்மை வாங்கி தாங்கி பொறுமையில் ஓங்கி உணர்வுகளின் விளைநிலமாகவும் கருவின் விதைநிலமாகவும் நிற்பவள் தாயல்லவோ.

உன்னைத் தூய்மையானவள் என்றார்களே தாயே அதனால்தானா என்னை "தூமை" என்று துடைத்தெறிய வந்தாய்... சொல் தாயே.... சொல். பழைய உறவைப் புதுப்பிக்க வந்த என்னை நன்றியே இல்லாது வாசலில் வைத்தே கொலை செய்ய நினைத்தாயே, உனக்கு எப்படி மனம் வந்தது. கொடூர விலங்குகளுக்கில்லாத கொலைவெறி உனக்கு எப்படி வந்தது. தாயே நீ அனுப்பிய கொலைக்கருவிகள் என்னை நோக்கி வருகின்றன. இதை நிறுத்தமாட்டாயா....?

மாட்டாய். நீ செய்யவே மாட்டாய். அடிமை விலங்குக்குள் அடைபட்டுக் கிடக்கும் நீ நிறுத்த மாட்டாய். தாயே நான் போகப்போகிறேன். மீண்டும் பிறப்பு என்பது உண்டு என்றால்... நீ வந்து என் வயிற்றில் பிற அன்பு, பாசம், பரிவு, நேசம் கருணை, இரக்கம், தயவு, தாட்சண்யம் என்பது என்ன என்பது புரியும். அதோ என் கழுத்தைக் கத்தரிப்பதற்கு நீ அனுப்பிய கத்திகளும் கருவிகளும் வந்துவிட்டன நான் போகிறேன். உன் வரவுக்காய் என்றும் அன்போடு காத்திருப்பேன். வா வந்து என் வயிற்றில் பிற.

இப்படிக்கு

உன் வயிற்றில் இருந்து பிரசவமாகாது,

சவமான புத்திரி


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குழந்தை கொல்லப்படும்போது கத்துகிறது.

*ஐயோ.... அம்மா!!! அம்மா!!!! அம்மா!!!!*

அம்மா என்ற குழந்தையின் குரல் அவளினுள் ஓங்கி எழுந்தது. "ஐயோ என் பிள்ளையைக் கொல்லாதீர்கள்.... என் பிள்ளையைக் கொல்லாதீர்கள். நான் கொலைகாரி இல்லை." எனக் கத்திக்கொண்டு படுக்கையை விட்டு எழுந்தாள். அவளது குரல் மருத்துவமனையின் சுவரெங்கும் எதிரொலித்து ஓய்ந்தது. இது கனவா நினைவா என்பது அவளுக்குப் புரியவில்லை. "எங்கே என் பிள்ளை..., எங்கே என் பிள்ளை...." எங்கோ இருந்து ஓடிவந்த தாதியர் சொன்னார்கள்.

"காலம் கடந்துவிட்டது. தற்போது தங்கள் முடிவு தாமதமானது. போன பிள்ளை போனதுதான். இப்போது நீங்கள் இருப்பது ஓய்வு எடுக்கும் இடம். மனத்தை அலட்டிக்கொள்ளாமல் படுங்கோ. எல்லாவற்றையும் மறந்துவிடுங்கோ."

மறப்பதா? இப்பதான் நினைக்கவே ஆரம்பித்திருக்கிறாள். அமைதியா? அமைதி அழிந்ததே இங்குதானே. யாருக்குமே கேட்காத அந்தக் குழந்தையின் குரல் அவளுக்குள் கேட்டுக்கொண்டு இருக்கிறது. யாருக்குமே எழுதப்படாத கடிதம் அவள் இதயத்தில் ஆழமாக எழுதப்பட்டிருக்கிறது. பெத்துப் பார்க்காத புத்திரியைத் தேடி இத்தாய் போகும்வரை அக்குழந்தையின் குரல் இன்னும் இன்னும் அவளுக்குள் கேட்டுக்கொண்டே இருக்கும்.

---



***எனக்குத் தெரிந்த***
***இளைஞர்கள் காதலித்தார்கள்***
***அவர்கள் தங்களோடு***
***குமரிகளை சிரித்துப்***
***பேச வைத்தார்கள்***
***பக்கத்து பக்கத்தில்***
***நின்று பருவத்தை***
***பரிபூரணப்படுத்தினார்கள்***
***வாலிபத்தின் வாசலில்***
***வாழ்க்கை வேலியிடாமல்***
***உயிரின் உண்மையான***
***உணர்வுகளை***
***உடனுக்குடன் நிறைவுபடுத்தினார்கள்***
***இயற்கையை வரம்புகளோடு***
***வழிமறிப்பவர்களால் வாடி நிற்காமல்***
***துணிந்து இயற்கையோடு***
***இயற்கையானார்கள்***
***என் பார்வையின்***
***சில கோணங்களில்***
***மனிதம் அங்கே***
***உயிர்ப்போடு இருப்பதாகப்***
***படுகிறது***
***நான் நினைத்துக்***
***கொண்டேன்***
***இனிமேல்***
***தோடு குத்திக் கொள்வதென்று.***

**ந. சிறீதர்** 10/05/2001

## ஜி. நாகராஜனிடமிருந்து சில துளிகள்

மனிதர்களிடம் நிலவவேண்டியது
பரஸ்பர மதிப்பே தவிர,
பரஸ்பர அன்பு அல்ல;
அப்போதுதான் ஏமாற்றுக் குறையும்.

தனது கலைப் படைப்புகள் மூலம்
சமுதாய மாற்றங்களை நிகழ்த்துவதாக
நினைக்கும் கலைஞனுக்கு,
பணம்பழத்தை வீழ்த்திய
காக்கையின் கதையைச் சொல்லுங்கள்.

மாற்றமுடிந்ததை மாற்று;
மாற்ற முடியாததை பொறுத்துக்கொள்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




இன்று
கனவு விழுங்கிய வாழ்விலிருந்து
என்னை மீட்டெடுத்தாய்.
விழிகள் கனக்கும்
கண்ணீரும் தூக்கமின்மையும்
தூங்கிக் கனவிடை அழியும்
காலத்துயரும்
கொடிய இருளும்
இருளிடை துழாவும் என்
அர்த்தமிழந்த பாடல்களுமாய்
நான் இறந்துபோக
இறவாமையின் இருத்தல் உணர்த்தி
என் கவிதைகளுக்கு உயிர்கொடுத்து
என்னை நீ மீட்டெடுத்தாய்.

நெஞ்சு கனக்கும்
நினைவழியா சுவடுகளில்
முகிழ்த்து
குருதி தோய்ந்தெழுந்த
என் பாடல்கள்
உன் பாதங்களை முத்தமிட்டபடி
குழந்தையின் கனவில் தோன்றும்
தேவதை போன்ற உன்னைச்
சுமந்திருக்கும்.

ஒரு விஞ்ஞானியின்
தீவிரமான ஆய்வுகளிலும்
சிக்காத
இயற்கையின் புதிர்களாய்
என் புலன்கள் அனைத்தையும்—நீ
அபகரித்துக் கொண்டதற்கான
காரணங்களை
கண்டறியும் வெறியோடும்
வேகத்தோடும்
என் கவிதைகளுள்
புதையுண்டு போகிறேன்.
காலமும் வெளியுமற்ற நிலையில்
உன்னோடு
காதலும் புணர்வதுமாய்....
என் கவிதைகள் மாத்திரமா
மரபை மீறின?...

பிரபஞ்சமாய்
புதிர்களோடும் புதையல்களோடும்
அதன் எல்லா நீர்ச்சுனைகளையும்
தழுவி வரும் தென்றலின்
குளிர்ச்சி போன்ற
உன் பார்வை பட்டு
என் பாலைவெளியில் துளிர்த்தது
பசுந்தளிர்!

தொலைவுகளில் முகம் மறைத்து
புன்னகைக்கும் நட்சத்திரங்கள்
கைகளில் வந்தமர்ந்ததாய்
ஒரு குழந்தையின்
பூரிப்போடு
நான்!

புதையுண்டிருந்து
மேலெழும்பும்
எல்லா ரகசியங்களும் போல
இருளுதைத்து மேலெழுந்து
நிறம் தொலைத்த என் நரம்புகள்மீது
உன் உதடுகள்
உச்சி முகர்ந்தன

இது வரவல்ல
வரம்
நான் கொண்டதும் தாபமல்ல
தவம்
இனித் தழுவி உயிர் கலந்து
குருதி தெறிக்க
காலத்தில் புதையுண்டு
மூழ்கியெழும்
எனது பாடல்.

அருந்ததி

www.tamilarangam.net

# சிறை

**வசந்தரூபன்**

பத்ரிக் ஹென்றி என்பவருக்கு 1976ம் ஆண்டு ஏழு வயது சிறுவன் ஒருவனைக் கடத்திச் சென்று கொலைசெய்த குற்றத்திற்காக ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டது. 25 ஆண்டு கள் கழித்து 2001ம் ஆண்டு ஏப்ரல் மாதம் பல நிபந்தனைகளுக்கு மத்தியில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட பொழுது ஐந்தாம் வகுப்புவரை மட்டுமே படித்திருந்த பத்ரிக் சிறைச்சாலையில் மறுபடி படிக்க ஆரம்பித்தார். கணிதத்திலும், கணனியிலும் பல்கலைக்கழக பட்டம் பெற்றுள்ளார். வெளியில் இவருக்கு வேலை தர ஒரு நிறுவனம் தயாராக இருந்தது. இவையே இவர் விடுதலை செய்யப்படுவதற்கு முக்கியமான காரணங்கள். இவருடைய விடுதலை குற்றவாளிகளின் வாழ்வில் சிறைச்சாலையின் பாத்திரம் குறித்த விவாதத்தை தூண்டிவிட்டது. பிரெஞ்சுப் பத்திரிகையான **Liberation** இது குறித்து **Caen** என்ற இடத்தில் அமைந்திருக்கும் சிறைச்சாலை ஒன்றில் ஆயுள்தண்டனை அனுபவித்துவரும் கைதிகளை நேர்முகம் கண்டது. அதை உங்களுக்காக தமிழில் தருகிறோம்.

## ஆயுள்தண்டனையின் அர்த்தம்



**பியர் (Pierre):**

நான் ஒரு ஆயுள்தண்டனைக் கைதி. பதினாறு ஆண்டுகளாக சிறையில் இருக்கின்றேன். தண்ட னைக் காலத்தில் நான் பிழை செய்திருக்கிறன், அதற்கான தண்ட னையை அனுபவித்துக் கொண்டிருக்கிறன் என்று விளங்கும். பிறகு இங்கே இருந்து எப்படியாவது வெளியே போகவேண்டும் எண்டு நினைப்பம். ஆனால், அது அவ்வ ளவு சுலபமில்லை என்று தெரிய வரேக்கை பயங்கரமாக சோர்ந்து போய் எங்களுக்குள்ளேயே இழந்து அழிந்து, ஒரு மனநோயாளிபோல ஆகிவிடுகின்றோம். குறிப்பிட்ட தண்டனைக்காலத்திற்குப் பிறகு விடுதலை கேட்டு விண்ணப்பிக் கலாம். அதுக்கு வெளியில ஒரு நல்ல வேலை, வீடு, ஆதரவான உறவினர்கள், நன்னடத்தை போன்ற காரணங்கள் அவசியம். ஆனால் நீதிஅமைச்சால எங்கட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். சோர்ந்து போவோம். ஆனால் இப்ப ஒரு புதுச்சட்டம் வந்திருக்கு. ஆயுள்தண்டனை கைதிகளின்ர விடுதலை விண்ணப்பங்களை பரிசீலிக்கிற பொறுப்பை ஒரு நீதிபதிகள் குழுவிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். இது எங்களுக்கு நம்பிக்கை தரக்கூடியதாக இருக்குது.

**புரூனோ (Bruno):**

முப்பது வருசம் கடுங்காவல் தண்டனை விதிக்கப பட்டவர்களின்ரை நிலைமையை நினைச்சுப் பாருங்கோ. இதைவிடக் கொடுமை உலகத்தில இல்லை எண்டு சொல்ல லாம். எப்படி ஒரு மனிசன் முப்பது வருசம் சிறைக்குள்ள கழிக்கிறது? இதைவிட மரணதண்டனை எவ்வ ளவோ மேல். இருபது வருஷத்தி லேயே மனிசன் மனநோயாளியாக ஆகிவிடுவான். எல்லோரும் அப்ப டித்தான் ஆகிஇருக்கிறாங்கள். வேணுமெண்டால் அவங்கட பைலுகளைப் போய்ப்பாருங்கோ. என்ன கொடுமையெண்டால், முப்பது ஆண்டு கடுங்காவல் தண்டனை இந்த இந்த குற்றத்துக்குத்தான் என்டில்லாமல் பலவிதமான குற்றங்களுக்கு கொடுக்கிறார்கள்.

**அலன் (Alain):**

அது ஏனென்டால் இந்த சமூகம் பயப்பிடுகுது. மற்றவனைப்பார்த்து பயப்பட்டு வாழவேண்டிய நிலைமை யிலை இருக்கிறாங்கள் சமூகத் திலை ஒவ்வொருத்தனும்.

**ஜெரால்டு (Gerald):**

முன்னமெல்லாம் பார்த்தீங் கெண்டா முப்பது நாப்பது வருசம் எண்டு வரையறுக்கப்பட்ட காலம் தண்டனை கிடையாது. ஆயுள் தண்டனைக்கைதிகள் எல்லாம் 15 வருசத்திலையே வெளியிலை வந்திடுவாங்கள். ஆனால் இப்ப 18, 20 எண்டு நீளுது. நானும் ஒரு ஆயுள்தண்டனைக் கைதி. எனக்கு இதுக்குள்ளை வந்தாப் பிறகுதான் தெரியும் கடைசி பதினைஞ்சு வருசத்துக்கு இதுக்குள்ளை இருந்து அசையேலாதென்று. இதுமாதிரி தண்டனைகள்தான் ஒருத்தனை குற்றம் செய்யாமல் தடுக்கும் என்று நான் நினைக்கேல்லை. இப்ப என்னைப் பாருங்கோ. 15 வருசத்துக்கு நான் ஒண்டுமே கேக்கேலாது. இந்தப் 15 வருசத்திலை நல்லவனா நடந்தால் என்ன, கெட்டவனாய் நடந்தால் என்ன. 15 வருசம் எண்டால் 15 வருசம்தான்.

**ஸ்ரெபன் (Stéphane):**

ஒரு ஆயுள்தண்டனைக் கைதிக்கு எந்தக் குறிக்கோளும் இல்லை. குறிக்கோள் ஒண்டு இருந்துதென்றால் வாழ்க்கையைத் திரும்பக் கட்டமைக்க உதவியா இருக்கும். இந்தச் சிறைச்சாலைகள் என்ன செய்யுது? ஒரு கட்டத்திலை தண் டிக்க வேணும்தான். ஆனால் அதற்குப் பிறகு ஒரு வாழ்க்கை வேணுமெல்லோ. அதற்கான படிப்புகள் வேணும். பிழையை விளங்கிக்கொண்டு அங்கால போக வழிசெய்ய வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்தமாதிரி விசயங்கள் தண்டனைக்கால ஆரம்பத்தில் இருந்து நீதிபதியிடம் பேசிச் செய்யவேண்டும். இல்லையேல் சோர்ந்து போய் விடுவோம். 20வது வருசம் கழிச்சு வெளியில் வந்து ஒண்டும் கிழிக்க ஏலாது.

**அலன் (Alain):**
ஆனால் இந்த சமூக அமைப்பு நாங்கள் திரும்பவும் நல்ல மனிசரா சமூகத்தில வாழுறத விரும்புறதா எண்டு எனக்குத் தெரியேல்லை.

**பத்திரிஸ் (Patrice):**
புதுப்புது சட்டம் எல்லாம் கொண்டு வாறார்கள். ஆனால் வெளியில போன குற்றவாளிகள் எப்படி இருக்கின்றார்கள். அவர்களைப் போல உள்ள இருக்கிறவர்களும் வெளியில் வந்தால் இருப்பார்களா எண்டெல்லாம் இதுவரை யாரும் கவலைப்படவில்லை.

## சிறையில் முதுமை அடைதலும் உடல்நலம் குன்றுதலும்

**பியர் (Pierre):**
காத்துக்கொண்டு இருக்கவேண்டியது. அவ்வளவுதான். எங்களோடை ஒரு 65 வயது கிழவன் இப்ப 10 வருசமா இருக்குது. அடுத்த வருசம் அவர் விரும்பினா வெளியிலை போகலாம். ஆனா அவருக்கு வெளியில போக விருப்பம் இல்லை. அதற்கான எந்த ஏற்பாடும் செய்யமாட்டன் என்றார். அவர் வெளியாலை போய் என்ன செய்வார்? வயது போனாக் கள், சுகமில்லாதாக்கள் இங்க அனுபவிக்கிற கொடுமை சொல்ல ஏலாது. எதுவும் பெரிசா கதைக்க மாட்டினம். தங்களுக்குள்ளேயே மூடிக்கொண்டு இருப்பினம்.

**புரூனோ (Bruno):**
என்னத்துக்காக இந்தமாதிரியான ஆக்களை இஞ்ச வெச்சிருக்கிறாங்கள் எண்டு விளங்கேல்ல. அவைக்கு இங்க என்ன இருக்கு?

**பத்திரீஸ் (Patrice):**
1998ம் ஆண்டு ஷலோன் (Châlon) என்ற இடத்தில் ஒரு ஆள் வருத்தத்தாலை செத்துப்போனதை நாங்கள் பாத்தனாங் கள். அவருக்கு எயிட்ஸ். கொஞ்சம் கொஞ்சமா ஜெயிலுக் குள்ளை செத்துக்கொண்டிருந்தவர். சொறிநாய் மாதிரி ஆள் செத்துப் போச்சு. ஒரு பையுக்குள்ளை போட்டுத்தான் சவத்தை கொண்டு போனவங்கள். எங்களைப் போய் அந்த ஆளைப் பார்க்க விடமாட்டம் எண்டிட்டாங்கள்.

**ஜெரால்ட் (Gerald):**
என்னை ஒருக்கா ஆஸ்பத்திரிக்கு கொண்டு போனவங்கள். காவலுக்கு நிண்ட பொலிஸ்காரர் என்னை எப்ப பார்த்தாலும் கெட்ட வார்த்தையால பேசுவான். ஒருக்கா ஒரு மனிசி வந்து ஏன் இவங்களையெல்லாம் இங்க கொண்டு வாறியள் என்று கேட்டுது. எனக்கு முழங்கால்ல ஒரு ஒப்பரேசன் செய்ய வேணும். ஆனா ஆஸ்பத்திரிப் பக்கம் தலைவைச்சு படுக்கக் கூடி விருப்பம் இல்லை.

**புரூனோ (Bruno):**
இன்னொராள் எங்களோடை இருந்தவர். ஆள் செய்தது பெரிய குற்றம்தான். ஆளை விடுதலை செய்த உடனை கொண்டுபோய் விசர் ஆஸ்பத்திரியிலை சேர்த்தாச்சு.



**ஜெயந்தி சாம்சன்**

வளையல்காரன்
கையைப் பிடித்தபோதும்
தையல்காரன்
மார்பை அளந்தபோதும்
பேருந்தில் ஏறி
நெரிந்தபோதும்
பற்றுச் சீட்டு
பெறும்போது
விரல்கள்
தடவியபோதும்
குடையின்றி
மழையில் நனைந்து
ஈரமாய் உடைகள்
ஒட்டிக்கொண்டு
நின்றபோதும்
படுக்கையின்
சுகத்தில் திளைத்து
களைத்து
வயிறு பெருத்து
வைத்தியன்
கை வைத்து
பார்த்தபோதும்
வகுப்பறை
கரும்பலகையில்
பெண் உறுப்பு
குறுக்குவெட்டுமுகமாய்
வரைந்து
ஆசிரியன்
விளங்க வைத்தபோதும்
ஓடி ஒழிந்து போனது
கற்பு.

அவள்
உடலில் உள்ள
நோய் குறித்து
நேயமாய்
நட்புடன்
சொல்லியபோதுதான்
நண்பன் மனைவியின்
மறைவிடத்து
மச்சத்தை
பார்த்து விட்ட
தோரணையில்
பாவனை செய்யும்
பாதகரை
என் செய்வாய்
கற்பே!

ஒழித்து கொள்வாயா?
இல்லையேல்
வீரமுடன்
எழுந்துகொள்வாயா?
தொடுகையில்கூட
எத்தனை
தொழுநோய்
விழுப்புண்கள்.

www.tamilarangam.net

## சிவலிங்கம் சிவபாலன்




காலை ஒன்பது மணிக்கு நீதிமன்றத்துக்கு முன்னாலுள்ள பதினெட்டாமிலக்க பஸ் தரிப்பிடத்தில் நிற்குமாறு இராசமலருக்கு மொழிபெயர்ப்பாளர் தங்கன் ஏற்கனவே சொல்லியிருந்தான்.

அதன்படி காலை ஒன்பது மணிக்கு முன்னதாகவே இராசமலர் அவ்விடத்துக்கு வந்து சேர்ந்துவிட்டாள். அவசர அவசரமாக காலை ஒரு வெறுங்கோப்பியை அருந்திவிட்டு இரண்டு பஸ் மாறி ஏறி வந்த இராசமலருக்கு வெறுப்பாகவும் அதேவேளையில் களைப்பாகவும் இருந்தது.

நன்றாக ஓய்வு எடுக்கும்படி ஒரு வாரம் லீவுக்கடிதம் எழுதிக்கொடுத்த சோமசுந்தரம் டாக்டரின் கடிதத்தின் ஒரு பிரதி தன் வேலைத்தலத்துக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவிட்டிருந்த இராசமலரால் ஒரு வாரமென்ன, ஒரு நாள் ஒரு மணியேனும் வீட்டில் ஓய்வாகப் படுத்துத் தூங்கமுடியவில்லை.

திரும்பத் திரும்ப தலைபோகிற காரியமும், காலை ஆறுமணியிலிருந்து ஒன்பது மணிக்குள்ளான வேலையால் பெறப்படும் சிறுதொகை ஊதியத்தின் வீண்விரயமும் இராசமலருக்கு எப்படி நிம்மதியையும் ஓய்வையுங் கொடுக்கப் போகிறது. மருத்துவரின் ஓய்வுக்கடிதம் ஒரு மூலையில் ஒடுங்கிக் கொண்டது.



மொழிபெயர்ப்பாளர் தங்கன் வந்தபாடாயில்லை. ஒவ்வொரு பஸ்ஸிலும் சனநெரிசலால், பயணிகள் இறங்கினாலே போதும் என்றுவிட்டு பஸ்ஸில் இருந்து இறங்கி ஓடிக்கொண்டிருக்க இராசமலர் தங்கனை எங்கே போய்த் தேடுவாள்.

"லோயர் அட்வகேட், கோடு கச்சேரி யெண்டு அலைஞ்சு திரிய எனக்கென்ன கேடு வந்தது" என்று தன்னைத்தானே நொந்து கொண்டு கண்களிரண்டும் பனிக்க காலைக் குளிரையும் பொருட்படுத்தாமல் கால்கடுக்க நின்றுகொண்டிருக்கிறாள் இராசமலர்.

ஆருக்காக, இத்தனை அலைச்சலெல்லாம் அதுவும் இந்த இயந்திரமயப்பட்ட புலம்பெயர்நாட்டிலே. எல்லாம் தன் இரண்டாம் மகன் பரன் செய்யும் திருகுதாளத்துக்காகத்தான்.

இலங்கையில் இருந்தபோதே இராசமலருடைய மூத்தமகன் தன் உயர்தரப் படிப்பையும் முடித்துக்கொண்டு தனக்குப் பிடித்த ஓர் ஆயுத போராட்டக்குழுவில் தன்னை இணைத்துக்கொண்டான். இராசமலருக்கு இது எவ்விதத்திலும் உடன்பாடில்லையாயினும் தன்மகனின் போராட்ட குணமும் அதன் வேகமும் அவளை அவள் மனத்துடன் சமரசம் கொள்ள வைத்தது. இருந்தாலும் தன் மகனை அந்த இயக்கத்தினின்றும் வெளிக்கொண்டு வரவே அவள் மனம் இடையிடையே அவளுக்கு நெருக்குதல்களையும் கொண்டு வந்தது.

இங்கு வாழ்ந்துகொண்ட இராசமலரின் கணவரான குணநாயகமும் இதையே வலியுறுத்தி அவ்வப்போது கடிதவரிகளால் இவளை அர்ச்சித்துக் கொண்டே இருந்தார்.

தான் கொண்ட இலட்சியப்பற்று உறுதியானது என்பதையே வலியுறுத்தி தன் தாயுடனான தொடர்புகளைச் சற்று விலக்கிக் கொண்டது இவளுக்கும் இவளது கணவனாருக்கும் மிகுந்த வருத்தத்தையே கொடுத்தது. இப்படிப்பட்ட ஓர் காலையில்.

தகவல் கிடைக்கப்பெற்ற இராணுவமும் காவல்படையுமாக இவள் வீட்டைச் சுற்றி வளைத்தது. சுற்றிவர ஒரே குரூர இராணுவ முகங்கள், இரும்புத் தொப்பிகளுக்கு ஈடான இறுகிய முகங்கள் பார்வையாலேயே வாழ்வை வெறுக்க வைக்கும் நிலைமைகளாக இராசமலருக்கு குலை நடுக்கம் ஏற்பட்டுவிட்டது.

கேள்விகளுக்கு மேல் கேள்விகள், மிரட்டல்கள், அடித்தொண்டையின் ஆக்ரோச வசனங்கள், இரும்புச் சப்பாத்துக்களின் இடியோசை அதட்டல்கள். இப்படியே உடைந்து கொண்டாள் இராசமலர்.

ஈற்றில் அவளது இரண்டாவது மகன் பரனைக் கைதுசெய்துகொண்ட காவல் இயந்திரம் "அவனைக் கொண்டு வா... இவனை விடலாம்...." என்ற தீர்ப்புத் திணிப்பின்பின் தன்னாட்டுப் படைகளும் தென்னாபிரிக்க ஆயுதங்களும் வெற்றிக் களிப்புடன் களமுகாம் திரும்பியது.

"அவனைப் பிடித்து இவர்களிடம் கொடுக்கவா .... இல்லை அகப்பட்டுக்கொண்ட இவனை மீட்கவா...."

அன்றிலிருந்து வீட்டில் உலை வைக்கவில்லை. அயலவர்கள்கூட உதவிக்கு வரவில்லை.

"எங்களிட்டையும் பிள்ளையள் இருக்குதுகள்.... பேந்து இஞ்சையும் வந்து அள்ளிக்கொண்டு போயிடுவாங்கள்...." மனப்பயம் இதையே ஒவ்வொரு வீட்டு வாசல்களையும் ஆக்கிரமிக்க இராசமலர் தனித்துக்கொண்டாள். இருந்தாலும் வீட்டில் அமைதியாகிக்கொள்ள முடியுமா?

தனக்குத் தெரிந்த அத்தனை மனித உரிமை மையங்களிடமும், குறைகேள் அதிகார அவையிடமும், மனநல நிறுவனங்களிடமும் தன் கண்ணீர்த்துளிகளை அவர்கள் காலடியில் போட்டு மன்றாடினாள். மனுவாக எழுதி வேண்டி நின்றாள். யாரால் என்ன செய்யமுடியும்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



"நடவடிக்கை எடுக்கிறோம், விபரமறிந்து தருகிறோம், அதிகாரிகளிடம் நீதி கேட்கிறோம்" என்று ஒவ்வொரு நிலையங்களிலும் இருந்து ஆறுதல் வார்த்தைகள் வந்தனவேயன்றி, பரன் பற்றிய நம்பகத் தன்மையான செய்திகளேதும் வராத நிலையில் வதங்கிக் கொண்ட இராசமலருக்கு ஒரு விடியக்கூடாத விடியல் விடிந்தது, வரக்கூடாத சேதி வந்தது. இராசமலரின் மூத்த மகன் களப்பலியானானாம். களப்பலியானவனை நினைத்து கதறுவதா? அவனால் இராணுவ கூடாரத்தினுள் வாடி வதைபடும் பரனை எண்ணிக் கதறுவதா? திருடனுக்குத் தேள் கொட்டிய நிலையாக இதயம் வெடிக்க வாயில் வார்த்தைகள் வராமல் தன்னையே வருத்திக் கொண்டாள்.

அன்று தொடங்கிய அவளது வாழ்க்கையுடனான போராட்டம் தொடர்கதையானதே தவிர துலர்ந்ததாகவில்லை.

தன் ஒவ்வொரு செக்கன்களையும் புலம்பெயர்மண்ணின் அடுக்களை அடுப்புகளுக்கருகில் நின்று தன்னையே தீய்த்துக்கொண்ட இவளது கணவன் குணநாயகத்தின் உறிஞ்சப்பட்ட உழைப்புப் போக, மீதி யாவும் உடம்பில் ஒட்டாமல் ஊருக்கு அனுப்பி காங்கேசன்துறையில் இருந்து கொழும்புவரை கூடாரமடித்துள்ள காக்கியுடைக் காவலர்களுக்குத் தண்ணீரால் அள்ளி இறைத்தபின்பே பரனின் முகம் காண இராசமலருக்கு வரம் கிடைத்தது.

அதன்பின்பே, "வாறவருசம் கோட்டுக்குக் கொண்டு வாறம், வாறவருசம் கோட்டுக்குக் கொண்டு வாறம்" என்று "வாற... வாற... வாற..." என்ற வார்த்தைகளின் பின் பரனுக்கு ஓர் 'விடுதலை' வரம் பலத்த பண அலைச்சல், வேண்டல்களுக்குப்பின் கிடைத்தது.

மனமும் உடலும் இளைத்த பின் இராசமலரும் பரனும் புலம்பெயர வாய்ப்பு வந்தது. எதிர்காலத்து உழைப்பை வார்த்தையாக்கி பணம் இவர்களுக்கு 'கடனாளி' என்ற அந்தஸ்தை 'அகதி' என்ற அந்தஸ்துக்கு முன்பே தந்துவிட்டது.

ஒரு தொழிலாளி எட்டு மணித்தியாலங்கள் வேலை செய்தால் போதுமானது என்கிறது, சட்டப்புத்தகத்து வரிகள். அந்த வரிகளுக்கு எங்கே தெரியப்போகிறது ஈழத்து அகதிகள் கடன் தன்னிறைவு.

எனவேதான் குணநாயகம் தன் வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி கண்ணை விழித்து ஒரு நாளுக்கு சராசரியாக பன்னிரெண்டு மணித்தியாலங்கள்வரை தன்னை உழைப்பு என்ற தீய்ச்சட்டிகளுக்குள் அமிழ்த்திக் கொள்கிறான்.

யார் என்ன பாடுபட்டால் பரனுக்கென்ன. காலை கோப்பியும் மதியம் மாலை 'வெட்டலுக்கும்' குறைவில்லையே.

வயதுக்கு எதிரான தோற்றம், விறைப்பேறிய உடலிறுக்கம் இவை தாராளமாகக் கிடைத்துவிட்டால், அடுத்ததாக அவனுக்கு இனியென்ன வேண்டும். கலப்பையில் பூட்டிவிட்டால் நல்ல மாடு உழும். கள்ளமாடு படுத்துக்கொள்ளும். பரனுக்கு படுத்துக் கொள்ளவும் விருப்பமில்லை உழுதுகொள்ளவும் தேவையில்லை.

வானம்பாடிகளாய்ப் பறக்கவேண்டும் என நினைத்தானோ என்னவோ. தாயும் தந்தையும் தேடலுக்காய் தொழிலகம் நோக்கி புயலாய் விரைய இவனும் இவனுடன் இசையும் இளசுகளும் புள்ளாய் பூரித்து மகிழவென தடாகங்கள் தேடியலைய புலம்பெயர் மண் வெக்கித்தான் கொண்டது.

பரன், வீட்டில் நல்லபிள்ளை. வெளியிலும் அதுபோல இருக்கவேண்டுமா. அவனுடைய தோற்றத்திற்கும் ஏற்கனவே தடுப்புக்காவலில் கிடைத்த அனுபவத்துக்கும் பயம் என்பது அவனிடம் ஒட்டிக்கொள்ளாமலே போனது.

கட்சிகளுக்கே குறைவில்லாத நாடுகள் நகரங்கள் போல புலம்பெயர் மண்ணிலும் மன்றங்கள் சங்கங்கள் கன்னைகள் ஏராளம். பரனுக்கும் கன்னையென்று ஒன்று இல்லாமலா இருக்கும். முதல் பள்ளிக்கூடத்தில் படித்த நண்பர்கள் ஏராளம். அது போலவே தொடர்ந்து ஒவ்வொரு பாடசாலைகளிலுமிருந்து



ஏராள நண்பர்கள் இவனுடன் சேர்ந்துகொண்டார்கள்.

வந்து சேர்ந்த இடத்து மொழியும் புரிபட மாற்றுக் கலாச்சாரத்து நண்பர்களும் இவனுடன் இணைவதும் ஏற்படவே செய்திருக்கிறது. அதுவே இவனுக்கு இவனைப் பொறுத்தவரையில் சற்று விபரீதமுமானது.

இளையவர் குழாமெனில், உடுப்பு நடப்பிலிருந்த சகல

www.tamilarangam.net

தன்மைகளிலும் தத்தமது வசதிக்கேற்ப தம்மை உருவாக்கிக்கொள்ளும் இன்றைய காலகட்டத்தில் தாம் செய்வது சரியென்பதும் தம்முடன் ஒத்துழையாதவை பிழையென்றும் எண்ணத் தோன்றும் வயதுகள். புத்திசொல்வதையோ புத்திமதி சொல்பவர்களையோ எதிரிகளாகக் கணிக்கும் வயது. விரிந்து கிடக்கும் வானத்தின் வெண்ணிலவையே வளைத்துப் பிடிக்கும் தன்மையையொத்த பருவத்தில் வராத குழப்படிகளா?


இந்த வயதில் இல்லாத வாலிப விளையாட்டுக்களா! ஒரே வயதையொத்த வேறொரு கன்னை எதிரே வந்துவிட்டால் குதூகலமும் கூடும். கூடவே குழப்பங்களும் கூடும். தேவையில்லாத ஒரு அற்ப விடயத்துக்காக நெஞ்சை நிமிர்த்திய ஒரு காலத்தில் உருவான பழைய பகை மீண்டும் அன்று புகைந்தது.

"இப்ப வா அடிபட்டுப் பார்ப்பம்...." எதிரே வந்தவோர் கன்னை முதலில் முழங்கியது. முடியுமா இது. கைகலப்பு முந்திக் கொண்டது. பிடித்துத்தள்ள யாரும் வரவில்லை. தெருவின் அத்தனை புருவங்களும் உயர வாரத்தைகள் வரம்புமீற வாலிபம் தன் வேட்கையை இளஇரத்தத்தில் ஊறப்போட்டது.

ஆயுதங்களைவிட கரங்களே முதலில் பேசியது. இரத்தம் துளியிலாரம்பித்து தெருவை நனைத்தது. திரும்பிப் பார்க்கமுதல் கறுப்பு அங்கியணிந்த அடிபொலிஸ் சுற்றி வளைத்தது. சம்பந்தப்பட்டவர்களையும் வேடிக்கை பார்த்துக்கொண்டவர்களையும் அகதி என்றும் பாராமல் மனிதரென்றும் பாராமல் அள்ளி வண்டியிலேற்றித் தம் முகாமுக்குக் கொண்டு போனது. விடுபட்டனர் அங்கு சிலர். வகையாக அங்கு மாட்டிக்கொண்டனர் பலர். பரன் அடித்ததால் பாதிப்புப் பலருக்காம்.

சேதி பறந்தது இராசமலரையும் குணநாயகத்தையும் நோக்கி. "உவனைப் பிணையெடுக்க நான் வரமாட்டன்.... பட்டுத் துலையட்டும்" என்ற குணநாயகத்தின் அழுத்தமான குரலின்பின், இராசமலர் ஒவ்வொரு படியாக ஏறி முன்பின் தெரியாத ஆண்களிடம் மன்றாடி, தன் மகன் பரனை பிணையிலெடுக்கவென புலம்பெயர்மண்ணில், புரியாத மொழித் தவிப்பில், மொழிபெயர்ப்புக்காக இன்னொருவனையும் கூலிக்கு அமர்த்திக்கொண்டு நீதிமன்றில் கதைக்கவென, சட்டவாதி ஒருவனை சந்திக்கவென கால் கடுக்க, காலைக்குளிரில் பஸ்தரிப்பு நிலையத்தில் நிற்கிறாள் இராசமலர்.

பரனுக்கு விடுதலை கிடைக்குமா? கிடைத்தாலும் இது புலம்பெயர்மண் என நினைப்பானா?



நிரஞ்சனா

நேற்றுப் பார்த்த
அதே மனிதன்தானா
என
ஐயமுறச் செய்யும்
பேச்சும் செயல்களும்
நேற்றும் இன்றும்
வேறொருவனாய்க்
காண்பிக்க
பெயரும்
அடையாளங்களும்
அவனேதான் எனும்.

பணம் பதவி
மற்றும் சில பல
மூடிகள் கொண்டு
முகத்தை மறைத்து
அகில மேடையில்
அழகாய் நடிக்கும்
இவர்களின்
முகமூடிகள்
ஆளாளுக்கு மாறுபடும்.

அணுகுபவரைப்
பொறுத்து
கொள்கைகள் வேறுபடும்
கோலங்கள் மாறுபடும்
ஒரே கருத்து
சிலவேளைகளில்
இரண்டாய் மூன்றாய்....

உன்னிலும்
என்னிலும்
தவறாய்க் கண்டது
தமக்கெனும்போது
சரியாய்ப்படும்

மூடிகள் களைந்து
எப்போ எப்படி
இவர்களின்
நிஜமுகம் காண்பது?

முகமூடியில்லா
மனிதரைத்
தேடிக்களைத்து
அச்சமுறுகின்றேன்.

இந்த
மூடியொன்று
என் முகத்தில்
விழாதிருக்க வேண்டும்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# கி. பி. அரவிந்தனின்
# கனவின் மீதி




ஒரு கையில் ஆயுதம். மறுகையில் எழுதுகோல் என்பது போல் தனது ஆரம்ப காலத்திலிருந்தே அரசியல் போராட்டத்தையும், இலக்கியப் படைப்பாக்கத்தையும் தனக்கான ஒன்றாக வரித்துக் கொண்ட கி. பி. அரவிந்தன் இன்றைய ஈழத்து புகலிட இலக்கிய உலகின் முக்கியமான ஒரு படைப்பாளி. படைப்பாக்க மனோநிலையுடன் கூடிய ஒரு போராளியின் அனுபவ வெளிப்பாடுகளும் ஒரு இலக்கியவாதியின் அவனது சமகாலத்து வாழ்நிலை மனோ நெருக்கடியின் மீதான வெளிப்பாடுகளும் கிளர்த்தும் தன்மையில் ஒரு குறிப்பிட்ட அடிப்படையினைக் கொண்டிருந்தாலும் அவை முற்றிலும் வேறு வேறான தளங்களில் நிகழ்பவை, அவற்றிற்குரிய தனித்த பரிமாணங்களைக் கொண்டிருப்பவை. ஆனால் இந்த இரு வேறுபட்ட வெவ்வேறு தளங்களின் அழகான ஒன்றிணைப்பை, ஒரு சுருதி சுத்தமான சேர்க்கையினை கி. பி. அரவிந்தனின் படைப்புக்களில் அற்புதமாகத் தரிசிக்க முடிகிறது. இவர் தமிழகத்தில் இருந்தபோது எழுதிய எழுத்துக்களில் இருந்து ஐரோப்பாவுக்கு புலம்பெயர்ந்தபின் எழுதுவதுவரை அவதானிக்கும் ஒருவர் இந்தக் கருத்தோடு பெரிதளவு மாறுபாட்டினைக் கொண்டிருக்கமாட்டார் என்பது என் எண்ணம்.

தமது போராட்ட அனுபவங்களை கவிதையில் வெளிப்படுத்தியவர்கள் நிறைய உண்டு. சே, நெருடா என்று சொல்லிக் கொண்டே போகலாம். எனினும் ஈழத்தில் பல கவிதைகள் வெறும் கோசங்களாகவும் இயந்திரத்தனமாகவும் இருந்தமையினால் படைப்புக்களாக நிமிர்ந்து நிற்க முடியாமல் அவைகள் வெகு விரைவிலேயே நீர்த்துப் போயின. அவற்றில் தேறியவைகளை விரல்விட்டு எண்ணி விடலாம். இந்த இடத்தில்தான் கி. பி. அரவிந்தன் முக்கியத்துவம் பெறுகிறார். இவருடைய அரசியலோடு மாறுபட்டிருப்பவர்கள்கூட இவரது படைப்பாளுமை குறித்து இதுவரை இருவிதமான கருத்துக்களை வெளிப்படுத்தியது கிடையாது. 'கனவின் மீதி' கி. பி. அரவிந்தனின் மூன்றாவது கவிதைத் தொகுதி. ஐரோப்பாவுக்குப் புலம்பெயர்ந்த பின் ஏறத்தாழ 93ம் ஆண்டிலிருந்து 98ம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் எழுதப்பட்ட கவிதைகளாக இவற்றை அறிய முடிகிறது. காலம், இடம் பற்றிய பிரக்ஞையினை மறந்துவிடினும்கூட ஆசிரிய குறிப்புக்கள் இல்லாதிருப்பினும்கூட இதனைச் சட்டென்று சொல்லி விடலாம் இது புகலிட இலக்கியம்தான் என்று. புலம்பெயர நேர்ந்த துயரங்களும் பிரிவாற்றாமையும் இவர் கவிதைகளில் சோகம் பிழிய வெளிப்படுகின்றன. இந்தக் கவிதைகள் கிளறும் சோகம் தவிர்க்க முடியாதவையாகப் படுகின்றன. என்று பேராசிரியர் கா. சிவத்தம்பி நூலில் குறிப்பிடுவது முற்று முழுதான உண்மை.

புலம்பெயர்தல் என்பது இயற்கையோடும் தனது சுற்றுச் சூழலின் ஒவ்வொரு அணுவோடும் ஒன்றித்துப்போன மானுடனுக்கு எப்போதுமே அதுவொரு பெரும் மரண அவஸ்தைதான். அதுவே ஒரு படைப்பாளியாயிருக்கும் பட்சத்தில் சொல்ல வேண்டியதேயில்லை. எனவேதான் இப்படிப்பட்ட புகலிட இலக்கியங்கள் இரத்தமும் சதையுமாகத் துடிப்போடு பேசிக் கொண்டிருக்கின்றன. இதனையே சிலர் புலம்பல் இலக்கியங்கள் என்று கொச்சைப்படுத்தலாம். அது மனிதனை இயந்திரத்தனமாகப் பார்த்துப் பழக்கப்பட்டுவிட்ட பார்வைக் கோளாறின் வெளிப்பாடு. வேரோடும் வேரடி மண்ணோடும் பிடுங்கி எறியப்பட்டு எங்கோ பெருந்தொலைவில் வேர்விட முடியாமல் கருகிக் கொண்டிருக்கும் மானுடவதையின் அவஸ்தைகள், அதன் வெளிப்பாடுகள் வேறு என்னவாயிருக்க முடியும்? எனினும் அவன் படைப்பாளியாயிருக்கும் பட்சத்தில் அவைகள் என்றென்றைக்குமாக மானுட மனச்சாட்சியின் கதவுகளைத் தட்டி அதன் நரம்புகளை அதிர வைத்துக் கொண்டிருக்கும் என்பதும் உண்மையல்லவா? இத்தகைய கலைத்துவப் பதிவுகளை வெறும் சூத்திரத்துள் திசை திருப்ப முயலும் இயந்திரத்தனங்கள் சாத்தியமா?

'அகதி' என்ற போர்வையோடு அடிக்கடி தமது நாட்டுக்குச் சென்று திரும்பக்கூடியவர்களுக்கு உண்மையிலேயே அகதியாகிப் போன ஒரு புகலிட மனிதனுக்கு கவிஞனுக்கு இருக்கும் மனோ அவஸ்தைகள், துயர், பிரிவாற்றாமை, ஏக்கம் என்பது இருக்க நியாயமில்லைத்தான். இத்தகைய வாழ்வை சுய அனுபவத்தில் வாழ்ந்து பெறவேண்டும். இறுதிவரை தன் தேசத்தைப் பார்க்கமுடியாமல் வேறொரு மண்ணில் உயிர்விட்ட ருஷ்ய திரைக்கலைஞன் ஆந்தராய் தார்க் கோவ்ஸ்கி, பாரிஸ் மண்ணில் இருந்துகொண்டு தனது துருக்கிய தேசத்தையும் அதன் மக்களையும் நினைத்து வருந்திக்கொண்டே உயிர்விட்ட மாபெரும் மக்கள் கலைஞன் இல்மஸ் குணே போன்றவர்களின் படைப்புகளையெல்லாம் வெறுமனே புலம்பல்கள் என்று ஒதுக்கித் தள்ளமுடியுமா? இம்மாபெரும் சோகங்களிலிருந்தெல்லாம் மனித குலத்துக்குக் கிடைப்பது எதிர்கால நம்பிக்கையை வழங்கிக்கொண்டு எழுதும் மகத்தான கலைப்படைப்புக்கள் தானென்பதை எப்படி மறுக்கமுடியும்? புலம்பெயர்தல் என்பது எத்தனை கொடுமையானது. ஒரு அகதி என்னவெல்லாம் இழந்து போகிறான். அவன் துயர் வெறுமனே பிரிவுத்துயர் மட்டும்தானா? அதனை ஒரு கண்ணீர்த்துளிக்குள் அடக்கிவிட முடியுமா?

கி. பி. அரவிந்தனின் 'கனவின் மீதி'யில் வரும் கவிதைகள்

www.tamilarangam.net

ஒரு அகதியின் மனநிலையில் நிறையவே பாதிப்பை நிகழ்த்துகின்றன. வாசிக்கும்போது பல இடங்களில் நெஞ்சு விம்முவதையும், கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியாமல் தவிப்பதையும் தவிர்க்க முடியவில்லை. இத்தகைய அனுபவத்தை அடைந்துதான் "அரவிந்தனின் துயரம் எங்களின் துயரமாகிறது" என்று பேராசிரியர் சிவத்தம்பி குறிப்பிட்டிருக்கிறாரோ தெரியவில்லை.

*ஒரேயொரு தடவை*
*எழுவான் திசையை*
*யாரேனும் சுட்டுவீராயின்*
*சுடரும் விடியல் சூரியனுக்கு*
*முகம் காட்டி நிற்பேன்*

'திசைகள்' என்றொரு கவிதை இத்தொகுதியில் இடம் பெறுகிறது. மேற்சொன்ன வரிகள் அதன் இறுதியில் வருகிறது. தொலைந்து போனவைகள் என்று நாம் கருதுபவைகளை மொத்தமாக உணர்த்துவதற்கு இதனை விடச் சிறந்த குறியீடு வேறு அவசியமில்லை என்று படுகிறது. எனினும் தொடர்ந்து பல கவிதைகளில் வெளிப்படுகிறது.

*குதித்தோடும்*
*மழைநாள் ஊரில்*
*வெறுங்கால் வெறும் மேல்*
*சில்லிடப் பூக்கும்*
*நிலம்*
*அந்த மழை எப்போது விடும்*
*என்னை*
(மழை)

*அறிந்தோமா நாம்*
*ஊரொடிந்து*
*ஊரோடிணைந்து*
*உறவொடிந்து*
*உறவின் ஊற்றான*
*குடும்ப அலகொடிந்து*
*உதிர்ந்த கனிகளாய்*
*வேறாகி வேற்றாளாகி*
*அந்நியமாகும் கதை*
(நெல்லியும் உதிரும் கனிகளும்)

இப்படி அநேகமான கவிதைகளில் அந்நியமாகிப் போன எம் வாழ்வின் ஜீவனைத் தேடும் ஏக்கம், அறுந்துபோன வேர்களோடு அலைவுறும் துயரம் அற்புதமாக வெளிப்படுகிறது. ஓர் அகதியாக இவர் வெளிப்படுத்தும் சோகம் வேரோடும், வேரடி மண்ணோடும் பிடுங்கி எறியப்படுகின்ற இன, மத, மொழி பேதமற்ற உலகத்து மக்களின் பொதுவான சோகமாகின்றது.

இவ்வாறுதான் இவரது காலனித்துவத்துக்கெதிரான ஆத்திரமும் ஒடுக்கப்பட்ட மக்களின் பொதுவான குரலாக ஒலிக்கிறது.

நீறுபூத்த நெருப்பாகவும், அநேக இடங்களில் வெளிப்படையாகவும் ஐரோப்பிய நாடுகளில் கனன்று கொண்டிருக்கும் இனவாதம், அகதிகளுக்கெதிரான அதிகாரப் போக்கு என்பனவற்றிற்கு ஒரு கருப்புமனிதனின் குரலில் கவிஞர் அரவிந்தன் 'நூலகமுன்றிலில்' என்னும் கவிதையில் கொடுப்பது மிகப் பெரிய சாட்டை அடி.

...
*என்னைப் போய்விடு என்கிறாய்*
*அதுவும் சரிதான்*
*நான் வந்ததும் தப்புத்தான்*
*மின்னணுத் தொலைபேசி*
*மின்சார விரைவூர்தி*
*மின்னொளிக் குளிப்பில் நகரம்*
*கண்வெட்டும் நேரத்திடை காரியங்கள்*
*உன்னிடத்திருந்தது வந்துவிட்டேன்*
*மன்னித்துக்கொள்*
*என்னிடத்தே*
*மின்னொளி மின்னூர்தி*
*தொலைபேசி தொலைக்காட்சி*
*ஏன்*
*அறிவியல் எதுவுமே இருந்ததில்லை*
*அப்படித்தான்...?*
*பின்னேன்*
*காட்டுவிலங்காண்டியான என்னிடம்*
*முன்னம் நீஏன் வந்தாய்*
*எந்தன் கோவணத்துடன்*
*உயிர்க்குலையையும்*
*உருவி வந்தாய்...?*
....

---

**எழுத்தாளர்கள் ஏகலைவன் மாதிரி.**
**அவர்கள் எந்த வாத்தியாரையும்**
**வைத்துக்கொண்டு**
**தங்கள் தொழில்களைக் கற்றுக்**
**கொண்டதில்லை.**
**அதேபோல எந்த ஒருவனுக்கும்**
**அவர்கள் வாத்தியாராக இருந்து**
**கற்றுக் கொடுக்க விரும்புவதும்**
**இல்லை.**

– கி. ரா.

அடுத்த இதழில் இருந்து வெளிவருகிறது
**'விழுதி'ன்**
**சுவடு....**

# கவிப்பூ....



**என் தோட்டத்தில்**
**கவிதைகளை விதைத்தேன்**
**கவியறுப்புச் செய்யலாம்**
**எனத் தோட்டம் நெருங்க**
**கவித்தோட்டத்திலே புதுக்கவிதையாய் நீ....**

**தமிழச்சி**


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இருத்தலியல்

## ஓர் சிறிய அறிமுகம் – வசந்தரூபன்

உலகில் மனிதனின் இருப்பை அடிப்படையாகக் கொண்டு உயிரியை ஆராய முனைகின்றது இருத்தலியல். மேற்குலகின் முக்கியமான இருத்தலியலாளர்கள் மூவர்: KIERKEGAARD, HEIDEGGER, JEAN PAUL SARTRE. இருத்தலியலை புலம்பெயர்ந்த தமிழ் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தும் விதமாக JEAN PAUL SARTREஇன் "L'EXISTENTIALISME EST UN HUMANISME" என்ற புத்தகத்திலிருந்து சில பகுதிகள் கீழே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

### இரண்டுவிதமான இருத்தலியல் கோட்பாட்டாளர்கள் உள்ளனர்.

இருத்தலியல் தொழில்நுட்ப வல்லுனர்களுக்கும், தத்துவவாதிகளுக்குமான கோட்பாடு. இருப்பினும் அதனை இலகுவாக அனைவருக்கும் புரியும்படியாக வரையறுத்துவிட முடியும். இதில் சிக்கலான விடயம் என்னவென்றால், இரண்டுவிதமான இருத்தலியலாளர்கள் உள்ளனர். முதலாவதாக கிறிஸ்தவ இருத்தலியலாளர்கள். இவர்களுள் கத்தோலிக்க கருத்தியல் சார்ந்த JASPERS மற்றும் GABRIEL MARCEL போன்றவர்களும் இரண்டாவதாக கடவுளின் இருப்பை மறுக்கும் இருத்தலியலாளர்கள். இவர்களுள் HEIDEGGER மற்றும் நான் உட்பட அநேகமான பிரெஞ்சு இருத்தலியலாளர்கள் அடங்குவர். மனிதசாரம் மனித இருப்பை முந்தியது என்ற இருத்தலியலில் அடிப்படைச் சிந்தனையே இவ்விரு சாராரையும் இருத்தலியலாளர்கள் என்ற அடையாளத்தின் கீழ் ஒன்றிணைக்கின்றது.

### மனித இருப்பு மனித சாரத்தை முந்தியது

மனித இருப்பு மனித சாரத்தை முந்தியது என்பதனை எப்படி விளங்கிக் கொள்ளவேண்டும்? மனிதனால் உருவாக்கப்பட்ட ஒரு பொருளை எடுத்துக் கொள்வோம். ஒரு புத்தகம் அல்லது ஒரு பேப்பர் வெட்டும் கத்தி. இந்தப் பொருள் ஒரு தொழிலாளியால் (கைவினைஞரால்-ARTISAN) உருவாக்கப்பட்டது. இதை உருவாக்குவதற்கு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட 'கத்தி' என்ற உருவமைப்பையும் அதனை உற்பத்தி செய்வதற்கான வழிமுறைகளை (concept) தொழிலாளி தேர்ந்து கொள்கிறான். இப்படி ஒரு பேப்பர் வெட்டும் கத்தி அது உற்பத்தி செய்யப்படுவதற்கு முன்பாகவே அதன் உருவமைப்பும் செய்முறையும் அதன் பயன்பாடும் தீர்மானிக்கப்பட்டு விடப்படுகின்றது. பேப்பர் வெட்டும் கத்தியை வைத்துக்கொண்டு என்ன செய்வது என்று தெரியாமல் ஒரு மனிதன் எப்பொழுதும் பேப்பர் வெட்டும் கத்தியை உற்பத்தி செய்யமாட்டான். இதைத்தான் நாங்கள் கீழ்வருமாறு சொல்கின்றோம். கத்தியின் சாரம், அதாவது கத்தி என்று ஒரு பொருளை வரையறுக்கக்கூடிய அதன் வடிவமைப்பு, செய்முறை, அதன் பயன்பாடு போன்றவை, கத்தியின் இருப்பை முந்துகின்றது. என் முன்னால் இருக்கும் புத்தகம் பேப்பர் வெட்டும் கத்தி போன்ற பொருட்கள் எல்லாம் அவற்றின் இருப்பிற்கு முன்னதாகவே தீர்மானிக்கப்பட்டவை. இதை உலகம் பற்றிய தொழில்நுட்பவயப் பார்வை என்று சொல்லலாம். இப்பார்வையின்படி உலகில் ஒவ்வொரு பொருளும் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டே பின் உற்பத்தி செய்யப்படுகின்றன.

படைப்பாற்றல் மிக்க கடவுள் என்று நாங்கள் உருவகப்படுத்தும்பொழுதும் கடவுளை ஒரு தொழிலாளியாகவே (artisan) ஒப்பு நோக்குகிறோம். DESCARTE அல்லது LEIBNIZ போன்ற எந்தக் கோட்பாட்டாளர்களை எடுத்துக் கொண்டாலும், அவர்களின் கருத்துப்படி எந்தவொரு செயலூக்கமும் (volonté) சிந்தனையைத் தொடர்ந்தே வருகிறது. குறைந்த பட்சம் சிந்தனையும் செயலூக்கமும் சேர்ந்தே இயங்கும். இதன்படி கடவுள் படைப்புச் செயலில் ஈடுபடும்பொழுது, தான் என்ன பொருளைப் படைக்கின்றான் என்ற தெளிவான அறிவுடன்தான் படைக்கின்றார். பேப்பர் வெட்டும் கத்தி எப்படி மனிதனின் சிந்தனையில் உருவாகிப் பின்னர் உற்பத்தி செய்யப்படுகின்றதோ அதேபோல் மனிதனும் கடவுளின் சிந்தனையில் உருவமைக்கப்பட்டு பின்னர் தீர்மானிக்கப்பட்ட சில செய்முறைகள் கொண்டு படைக்கப்படுகின்றான். ஆக ஒவ்வொரு மனிதனும் கடவுளின் சிந்தனையில் உருவான "மனிதன்" என்ற உருவக அச்சில் வார்க்கப்பட்ட பிரதிகளே.

பதினெட்டாம் நூற்றாண்டில் கோட்பாட்டாளர்கள் "கடவுள்" என்ற சொல்லைத்தான் நிராகரித்தார்களே ஒழிய மனிதசாரம் மனித இருப்பை முந்தியது என்ற கருத்தை அவர்கள் நிராகரிக்கவில்லை. இந்தக் கருத்தை DIDEROT, மற்றும் VOLTAIRE முதல் KANT வரையிலும் நாம் காணலாம். இவர்களைப் பொறுத்தவரையில் மனிதனிடம் மனித இயற்கை என்று ஒன்று இருக்கிறது. இந்த மனித இயற்கைதான் கடவுளின் சிந்தனையில் உள்ள மனித உருவக அச்சு. இந்த மனித இயற்கையை உலகில் உள்ள ஒவ்வொரு தனிமனிதனிடமும் காணலாம். இந்தப் பொதுவான மனித இயற்கையை அடிப்படையாகக் கொண்டே காட்டு மனிதன், இயற்கை மனிதன், பூர்சுவா மனிதன் போன்ற அனைத்து விதமான மனிதர்களும் ஒரே மாதிரியான அடிப்படைத் தன்மைகள் உடையவர்கள் என்று KANT வரையறுக்கிறார். இங்கு நாம் காணும் வரலாற்று மனிதனின் இருப்பை அவனது சாரம் முந்திக் கொள்கிறது.

கடவுளின் இருப்பை மறுத்து எழும் இருத்தலியல் புரிந்து கொள்வதற்கு இலகுவானது. இது கடவுளின் இருப்பை மறுதலித்து ஏதாவது ஒரு உயிரியின் இருப்பு அதன் சாரத்தை முந்துகின்றது. அதாவது தான் இன்னதுதான் என்று தன்னை வரையறுத்துக் கொள்வதற்கு முன் அது இருக்கின்றது. அந்த உயிரிதான் மனிதன், HEIDEGGERஇன் வார்த்தைகளில் சொல்வதானால் மனித யதார்த்தம் என்கின்றது.

மனித இருப்பு மனித சாரத்தை முந்தியது என்பதன் விளக்கம்தான் என்ன? இதன் விளக்கம் என்னவென்றால் முதலில் மனிதன் இருக்கின்றான், தன்னைக் கண்டு கொள்கின்றான். உலகில் நிலை கொள்கின்றான், கடைசியாக தன்னை வரையறுத்துக் கொள்கின்றான். இருத்தலியலின் பார்வையில் மனிதன் வரையறுக்கப்பட முடியாதவன் ஏனெனில் முதலில் அவன் எதுவுமே இல்லை. மனிதன் தன்னை எதுவாக ஆக்கிக் கொள்கின்றானோ அதுவாக இருக்கின்றான். மனித இயற்கை அல்லது மனிதத் தன்மை என்று ஒன்றுமே இல்லை. மனித இயற்கை என்ற ஒன்றை உலகிலுள்ள மனிதர்கள் எல்லாருக்குமாக உருவாக்க கடவுள் வேண்டும். ஆனால் கடவுள் தான் இல்லையே பின்னர் எப்படி மனித இயற்கை என்றொன்று இருக்கமுடியும்.

மனிதன் தன்னைத்தான் எப்படி உருவாக்கிக் கொள்கின்றானோ அது தவிர அவன் வேறெதுவுமாகவோ இல்லை. இது இருத்தலியலின் முதன்மையான அடிப்படைக கோட்பாடு. இதன்மூலம் நாங்கள் என்ன சொல்ல வருகின்றோம், மனிதன், கல்லைவிட மேசையைவிட மிகவும் மகத்தானவன் என்பதைத் தவிர...?

தொடரும்....




செவ்றோன் சுதா

கூட்டம் கை தட்டியது.

இந்தக் கை தட்டலின் அர்த்தம் என்ன?!

"அறுத்தது போதும் போ" என்பதா?!, "இல்லை, நல்ல விஷயம் ஒன்றைச் சொல்லி இருக்கிறாய்" என்பதா?! புரியவில்லை. சந்தோஷத்தை கை தட்டுதலில் மட்டும் காட்டுவதை விட்டு, பங்களிப்பு உதவிகள் மூலம் காட்டுங்கள். என் கரு உருப்பெற வழி செய்யுங்கள். உள்மனது இருகரம் கூப்பி அரங்கில் அமர்ந்திருக்கும் அனைவரையும் வேண்டியது.

நடிகைகளைக் கண்டவுடன் இளைஞர்களின் முகத்தில் மலர்ந்த மகிழ்ச்சி என் பேச்சின்போது ஏற்பட்டிருக்குமா?! நடிகைகளின் குரலில் மயங்கி, புத்தி நழுவி ஏதேதோ பேசியவர்களுக்கு என் கருவின் கனம் புரிந்திருக்குமா?!

ஓடியோடி உழைத்த உடலுக்கு இன்றுதான் விடுமுறை என்றெண்ணி இங்கு வந்தமர்ந்தால், இவன் தொண்டைக்குழிக்கு கத்தி வீசுகிறானே என்று யாராவது நினைத்து வெறுத்திருப்பார்களா? என் சொற்களின் சூட்டில் உள்ள வெப்பம் தாங்காமல் யாராவது வெறுத்து வெளியேறி இருப்பார்களா?!

இந்த மேடைப்பேச்சு இந்த நிமிடத்திலேயே மறந்து போகுமா?! என் சொற்கள் அரங்கத்தை விட்டு வெளியேறும் ஒவ்வொருவரின் காலிலும் மிதிபட்டு சிதைந்து போகுமா?! இவனுக்கு விசர். வேற வேலையில்லை என்றென்னைப் பேசுமா?!

தெரியவில்லை

மனது கனத்திருந்தது.

கண்கள் ஏனோ கலங்கியது.

மேடையைவிட்டு இறங்கி நடந்தேன்.

இரண்டு நிகழ்வுகளுக்கு இடையில் கிடைக்கும் ஓர் இரு நிமிடங்களில் அரங்கம் அமைதியைத் தொலைத்திருந்தது.

மௌன அஞ்சலியின்போது அழுத குழந்தை இன்னும் அழுதுகொண்டே இருந்தது. அதற்கும் என்போல் என்ன வலியோ?!

"நல்லா இருந்தது"

முதுகுக்குப் பின் மறைந்திருந்த முகத்தை திரும்பிப் பார்த்தேன். பார்த்த முகம். ஆனால் சட்டென்று ஞாபகம் வரவில்லை. சிரிக்க முயன்று தோற்றுப் போனேன். சந்தோஷமாய் இருந்தது. ஒரு கலைஞனுக்கு ரசிகனின் பாராட்டைவிட வேறென்ன வேண்டும். கடவுளே! ஒருவருக்காவது விளங்கி விட்டதே. இது போதும். என் எழுத்துக்கு வெற்றி. நான் பட்ட கஷ்டங்களுக்கும் பலன். மனது துள்ளிக் குதித்தது. அத்துமீறி ஆடியது.

"உங்களுக்கு என்ன பிடித்திருந்தது"

"உங்கள் குரல்"

"வேறு"

"வே....று...." என்றிழுத்தார். இதயம் இரண்டானது. அத்துமீறி ஆடிய மனது. அறுந்து விழுந்தது. இருந்தும் தொடர்ந்தேன்.

"கரு"

"கருவா....?! அதைப்பற்றி நீங்கள் பேசவே இல்லையே!"

மனதில் பாரம் கூடியது.

மௌனமாய் நடந்தேன்.

தனி இடம் தேடி அமர்ந்து சிகரட் ஒன்று பற்ற வைத்தேன். நாற்காலியில் நன்றாக தலையை சாய்த்து கண்களை மூடிக் கொண்டேன். கண்களைத்தான் மூடமுடிந்ததே தவிர மனதினை மூடமுடியவில்லை.

"கருவா....?! அதைப்பற்றி நீங்கள் பேசவே இல்லையே!"

"கருவா....?! அதைப்பற்றி நீங்கள் பேசவே இல்லையே!"

இரவும் பகலும் சிந்தித்து, உணர்வெல்லாம் சிந்தனையை ஊறவைத்து, உயிருக்கு உணரவைத்து, ஊன் உறக்கமின்றி சிந்தித்ததை எல்லாம் சிதறவிடாமல் சேகரித்து, பேனாவில் ஊற்றி வைத்து வெள்ளைத்தாள்களை கனத்த மனதுடன் கறுப்பாக்கி, நடுங்கும் கால்கள் உடன் மேடை ஏறி, தொண்டைக்குழி வறண்டு போகுமட்டும் கத்தியது வீண்தானா?!

வாய்விட்டு அழவேண்டும் போல் இருந்தது.

இமைகள் நனைவது புரிந்தது.

"சிகரட்டோட தவம் செய்கின்ற ஞானியை இன்றுதான் நான் பார்க்கிறேன்."

கண் விழித்தேன்.

குரல் வந்த திசையில் எனக்குத் தெரிந்த ஒரு கடை முதலாளி நின்றிருந்தார்.

அவரும் ஒரு சிகரட்டை பற்ற வைத்துக்கொண்டு என் அருகில் வந்தமர்ந்து கொண்டார்.

அவருடன் ஏதாவது பேசவேண்டும் என்றுகூட நினைக்காமல் மனது அமைதியாக இருந்தது. மனது எதுவும் பேசும் நிலையில் இல்லை.

சற்று நேர மௌனத்திற்குப்பின் மௌனம் கலைத்தார்.

"இதெல்லாம் தேவையா சுதா? பேசாமல் வேலைக்குப் போனமாம், நாலு காசை உழைச்சமாம், வீட்டைப் பார்த்தமாம் என்றில்லாமல் வாசகசாலை.... மயிர்.... மண்ணாங்கட்டி என்று கொண்டு...."

இடைவெளிவிட்டு என்முகத்தை உற்று நோக்கினார்.

காயம் பட்ட மனதிற்கு இன்னும் கட்டுக்கூடப் போடவில்லை. அதே இடத்தில் மீண்டும் அடி.

".... நாங்கள் தலைகீழாக நடந்தாலும் நாடு திருந்தாது. அதுவும் எங்கள் தமிழாக்கள்.... ம்கூம்... யார் என்ன சொன்னாலும் செய்தாலும் எப்ப எது நடக்கவேண்டுமோ அதுதான் நடக்கும்."

நிறுத்தி இன்னும் ஒரு சிகரட் பற்ற வைத்துக்கொண்டார். என் சிகரட் எரிந்து முடிந்திருந்ததனால், ஒரு மரியாதைக்காக என்னிடம் சிகரட் பெட்டியை நீட்டினார். நான் வேண்டாம்

www.tamilarangam.net



என்று தலையசைத்தேன். திருப்தியுடன் இருந்த இடத்திற்கே சிகரட் பெட்டி திரும்பிச் சென்றது.

புகையை ஒரு முறை நன்றாக உள்ளிழுத்து அடிச்சுவாசம் வரை தொடவிட்டு அந்த சுகத்தை கண் மூடி அனுபவித்தவர். சட்டென்று கண் திறந்து என்னைப் பார்த்தார். ஒரு கேலிச் சிரிப்புடன் புகையும் வார்த்தையும் போட்டி போட்டு வெளியேறின.

"வாசகசாலை திறக்கிறதென்பது நீ நினைக்கிற மாதிரி கடற்கரையில் வீடு கட்டிற விடயம் அல்ல. அதற்கு முதலில் நல்ல இடம் வேண்டும். 'லாசப்பலிலோ' அல்லது 'மாக்கடைப் புவசனியரிலோ' தான் இடம் எடுக்கவேண்டும். ஏன் என்றால் தமிழாக்கள் வந்துபோகிற இடமாக இருக்க வேண்டும். அந்த இடத்தில் ஒரு கடை எடுக்க எவ்வளவு முடியும் தெரியுமா?!...." என்றவர் நிறுத்தி மீண்டும் ஒரு முறை புகையை உள்ளிழுத்து என்னை ஒரு ஏளனப்பார்வை பார்த்தார்.

என் எல்லா மேடைப்பேச்சிலும் ஏதாவது ஒரு வம்பை விலைக்கு வாங்கிக் கொள்கிறேன். நான் என்ன சொன்னாலும் அதில் குற்றம் காண பலர் இருக்கின்றனர் என்பது எனக்குத் தெரியும். அதற்காக என் பேனாவையும் எழுத்தையும் குழிதோண்டிப் புதைக்க முடியுமா? பலருக்கு உண்டது செமிப் பதில்லை. ஊர்க்கதை பேசி செமிக்க வைப்பவர்களுக்குப் பயந்து நான் ஒதுங்கி வாழ வேண்டுமா? தாங்கள் எது செய்தாலும் அது புனிதம் போற்றப்படவேண்டியது. அதையே மற்றவன் செய்தால் கேவலம். என்ன மனித மனமோ? எழுந்துபோய் விடு. என்னைத் தனிமையில் விடு.

"...எங்கேயாவது மூலையிலே இடம் எடுத்தால் அங்கே யார் வருவான்?! நீயும் உன்னைச் சுற்றி இருக்கிறவர்களும்தான் போகணும். அதற்காகவா வாசகசாலை?! அதற்காகவா இந்த மேடைப் பேச்சு?! அவனவனுக்கு நேரம் கிடைக்கிறதே பெரிய விடயம். உங்களை மாதிரி றோட்டிலை நின்றால் பரவாயில்லை...." மீண்டும் ஒரு முறை கேலிச் சிரிப்பு. கோரப் பார்வை.

வியாபாரியே! நீ சொல்லும் விலைக்கு விற்க என் சொற்கள் ஒன்றும் உன் பொருட்கள் அல்ல.

உனக்கு என்மீது ஏதோ கோபம். அதை முகத்திற்கு நேர் சொல்வதை விடுத்து சுற்றி வளைத்து வருகிறாய். பல நாள் பாரத்திருந்து இன்று மோத வருகிறாய். முட்டிவிட்டுச் செல். மூக்குடைதலும் முகத்தில் கீறல்களும் வாழ்க்கையில் அனுபவம். சுகமாக வாங்கிக் கொள்கிறேன். சுயமாக சிந்திக் கிறேன். அடுத்த அடி விழும் முன் விலகி நின்று வேடிக்கை பார்க்கிறேன்.

நீயும் எங்களின் வயது தாண்டி வந்தவன்தான். குளக்கரை, வயல்வெளி, கோயில் திருவிழா என்று சுற்றியவன்தான். வீதி யின் விளிம்பில் உன் விடியலின் கனவுகளை விற்றவன்தான். தாவணியின் அசைவில் தடுமாறியவன்தான். எந்தப் பெண்ணா வது அன்பாகப் பார்க்க மாட்டாளா, ஆசையாகப் பேச மாட் டாளா?! என்று ஏங்கியவன்தான். கொல்லைப்புறத்தில் ஒளிந்து நின்று குறைபீடி பிடித்தவன்தான். கள்ளுக் கொட்டகையில் காத்துக்கிடந்தவன்தான்.

இருந்தும் இன்று தத்துவம் பேசுகின்றாய். உன் உண்மையான முகத்தை மறைத்து வைத்துவிட்டு முகமூடி அணிந்து ஊருக்குள் திரிகின்றாய். உன் குடும்பத்துக்குள் ஆயிரம் பிரச்சனை இருக்கும். அதை விட்டுவிட்டு எம்மை மென்று தின்றுகொண்டு வாழ்கிறாய். உன் தொழிலாளிகளுக்கு மாதம் மாதம் ஒழுங்காக சம்பளம் கொடுத்தாயா?! வேண்டாம். போய்விடு"

அவருடைய செருமல் என் சிந்தனையை சிதறடித்தது. நன்றாக அமர்ந்து தன்கைகளை இருக்கையின் மூலைகளோடு இணைத்துக்கொண்டு தன் தொண்டையைச் சரிசெய்து கொண்டார்.

"ஏதோ ஒரு முடிவோடு தான் இங்கு வந்திருக்கின்றாய். உன்னால் முடிந்தளவு முனகிவிட்டுப்போ. முக்கல்களுக்கும் முனகல்களுக்கும் என்னிடம் பதில் இல்லை"

"சிம்ரானின் இடை அழகு, ரம்பாவின் தொடை அளவு ரகசியங்கள் தெரிந்தால் போதும் உயிர்வாழ என்று வாழ்பவர்களுக்கு நல்ல புத்தகங்களை அறிமுகப்படுத்த வேண்டும்." நாளை இங்கு பிறக்கும் ஈழத்து சந்ததிக்கு தமிழும் ஈழமும் மறந்துபோய்விடக்கூடாது என்றாய். சினிமாப் புத்தகங்களை வாங்கிறது ஆற அமர இருந்து வாசிக்கிற துக்கில்லை. ரயினிலை வேலைக்குப் போட்டு வரயுக்குள்ள மற்றவன்ரை முகத்தை முகத்தை பார்த்துக் கொண்டிருந்தால் அவன் 'கஸ்கியா?' எண்ட, எங்கடை ஆக்களுக்கு விளங்காமல் அவனை ஒரு மாதிரிப் பார்க்க பிரச்சினைதானே. ஏதாவது வாசித்துக் கொண்டிருந்தால் நேரம் போறதும் தெரியாது பிரச்சனையும் வராது. நாலு வார்த்தை எழுத்துக்கூட்டி வாசிக் கத் தெரிந்தால் சரி... பெரிய மனுசன் ஆயிடுறாங்கள். ஏதோ நீதான் தமிழையும் ஈழத்தையும் காப்பாற்றப் போறவன் மாதிரி நிக்கிறாய்?!

தன் நீண்ட உரையை நியாயப்படுத்தி முடித்து என்னை உற்றுப் பார்த்தார்.

"என்ன மேடையில மட்டும்தான் பேசுவியோ"

'சரி. உன் விதி'

"பேசலாம். உங்களோடும் பேசலாம். நியாயமாகப் பேசிறதாக இருந்தால் ரொம்பப் பேசலாம்."

"அப்ப இவ்வளவு நேரமும் நான் நியாயமாகப் பேசல" என்றவர் என்னை எரித்து விடுவதாகப் பார்த்தார். என் முகத் திலும் வாரத்தையிலும் எந்தவித மாற்றமும் காணாதவர் என்னை வெட்டிப் போட்டால் ஒரே மூச்சில் தின்று முடிப்பார் என்று தோன்றியது.

"ரயிலில சினிமாப் புத்தகங்களை வாசிக்கிறதுக்குப் பதிலாக ஏதாவது நல்ல புத்தகம் வாழ்க்கைக்குத் தேவையான புத்தகங்களை வாசிக்கலாம்."

"அவனவன் வாழ்க்கையை அவனவன்தான் நிர்ணயிக் கிறான். எழுத்தாளன் ஒன்றும் கடவுளும் இல்லை. அவன் எழுத்து ஒன்றும் வேதவாக்கும் இல்லை. உன்னைமாதிரி முட்டாள்கள் எழுத்தாளனைக் கொண்டாடலாம். தலையில தூக்கி வைத்து ஆடலாம். புத்தகம் ஒன்றும் வாழ்க்கைக்கு உதவாது. நீ செய்யும் முட்டாள்தனத்தை மற்றவனை யும் செய்யச் சொல்கிறது உன் அறிவீனம்."



"வாழ்க்கையை அறிந்து உணர்ந்து மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள நினைக்கும் ஒரு சில எழுத்தாளர்களின் எழுத்தில் உண்மையிருக்கிறது. மற்றவனின் மீது அக்கறை, கவலை இருக்கிறது. தான் பட்டதை அவன் படக் கூடாது என்ற எண்ணம் இருக்கின்றது.

ஒருவன் சொல்வதையோ எழுதுவதையோ முழுவதுமாக ஏற்கச் சொல்ல வில்லை நான். எனக்குள்ளேயே பல முரண்பாடுகள், கேள்விகள் இருக்கும்

www.tamilarangam.net

போது நான் எப்படி என் கருத்துகளை மற்றவனை ஏற்கச் சொல்லமுடியும். திணிக்கப்படுதல் என்பது வேறு. தூண்டப்படுதல் என்பது வேறு.

எவரும் எவரிடமும் எதையும் திணிக்க முடியாது. நீ இதைச் செய், அதைச் செய்யாதே என்று அதிகாரம் பண்ண முடியாது. எவராலும் எவரையும் விரல்பிடித்து வாழ்க்கையின் இறுதிவரை கூட்டிச் செல்ல முடியாது. மற்றவனுடைய காயத்தையோ கண்ணீரையோ பகிர்ந்துகொள்ளமுடியாது.

தூண்டப்படுகிறது. ஏன் எதனால் அடிவாங்கினாய்? சிந்தி. நன்றாகச் சிந்தி. நாளை அடி விழும்முன், விலகி நின்று வேடிக்கை பார் என்று தூண்டப்படுகிறது.

உனக்கும் எனக்கும் வெவ்வேறு வலிகள். வெவ்வேறு வேதனைகள் வெவ்வேறு அனுபவங்கள். ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொள்வதானால் சில சமயம் வழக்கும் வாழ்க்கை கைகளில் சிக்கக்கூடும். சுகமாக வாழக்கூடியதாக மாறக்கூடும்.

ஒரு எழுத்தாளனின் எழுத்து பலருக்கு பொறுமையை, மௌனத்தை, மற்றவரின் மனதை அறிதலை, மற்றவரின் செயலை நாலுவிதமாக சிந்தித்தலை, கற்றுக் கொடுத்திருக்கிறது. அதில் நானும் ஒருவன்"

"எவனோ ஒருவனுடைய எழுத்து உனக்கு பொறுமையை மௌனத்தை கற்பித்ததென்றால் அது பொய்"

"ஒரு முட்டாளின் முன்னால் இவ்வளவு நேரமும் அமைதியாக இருக்கின்றேன் என்றால் அதற்குக் காரணம் என்ன?!"

"என்னை முட்டாள் என்கிறாயா?!"

"யாருமே இதுவரை சொன்னதில்லையா"

"திமிரா?!"

"....ம் அப்படியும் சொல்லலாம்"

என் வார்த்தைகள் அவரைச் சுட்டிருக்க வேண்டும். சட்டென்று முகம் கறுத்தது. தலையைக் குனிந்துகொண்டு ஏதோ தனக்குள் வாய்விட்டுப் பேசிக் கொண்டார். பெரிதாக ஒரு பெருமூச்சு விட்டார். நல்ல காலம் நிலத்தில் மரங்கள் எதுவும் இல்லை. இருந்திருந்தால் எரிந்து போயிருக்கும்.

நாற்காலியில் சாய்ந்து கண்களை மூடி நன்றாக இருமுறை மூச்சை இழுத்துவிட்டுக்கொண்டேன். சுகமாக இருந்தது. மனதில் எதையும் போட்டுக் குழப்பாமல் வெறுமனே இருந்தேன். அது அப்பொழுது தேவையானதாக இருந்தது.

"உனக்கு எதுக்கெடுத்தாலும் கோபம். மூக்குநுனியிலை கோபம் இருக்கிறவனுக்கு மூளை வேலை செய்யாது. யாரோடு என்ன பேசுகிறது என்றுகூடத் தெரியாது. எவனோ எதிலேயோ எழுதினதை அப்படியே மனப்பாடம் செய்து வேறு எங்காவது ஒப்பித்தால் பெரிய மனிதன் என்ற நினைப்பு.

பணத்துக்காகத்தான் அவனே எழுதுகிறான். நாலு நாள் பட்டினி என்றால் பசியைத் தவிர வேறெதுவும் அவன் சிந்தனைக்கு வராது. பேனா பிடிக்க விரல்களில் பலம் இராது. ஒரே விடயத்தை ஒவ்வொரு பத்திரிகைக்கும் ஏற்றமாதிரி பல விதமாக எழுதுகிறவன்தான் இன்றைய எழுத்தாளன். அவனும் என்னை மாதிரி வியாபாரிதான். எல்லாம் பணத்துக்காகத்தான்."

"கொடுமை"

சொற்கள் சூடாய் வெளியேறியது. என்ன என்கிறமாதிரி என்னைப் பார்த்தார்.

"பணத்துக்காகத்தான் உலகமே இயங்குகிறது என்கிற உங்கள் நினைப்பு."

"இரண்டுங்கெட்டானுக்கு இதெல்லாம் விளங்க நாளாகும்."

உண்மைதான். நான் இரண்டுங்கெட்டான்தான். வாழ்க்கையை விளங்குகிறதுக்கு ஒன்று தலை நரைக்க வேண்டும். இல்லாவிட்டால் பணம் இருக்கவேண்டும். இரண்டும் என்னிடம் இல்லை.

விழா முடியுமுன்னரே அரங்கை விட்டு வெளியேறினேன்.

## நட்பு நிலைத்திருக்க

கமலபாரதி

பனிதூரவும் புலம்பாவும்
பைந்தமிழர் வாழ்வு
இனிதாமோ என்றெண்ண
இல்லையொரு காலை
தனித்தான வாழ்வென்று
தினம் எண்ணும் வேளை
மனிதாப விழுமியங்கள்
மனஞ்சேரவேண்டும்

பற்றான தாய்ப்பூமியின்று
பற்றி எரியும் வேளையிலும்
பற்றில்லா மனத்தவரின்
பழி தாங்கும் இதயங்கள்
குற்றம் பல புரிந்து எம்மின்
குலம் தாழச் செய்கின்றார்
சற்றுமிதை நிறுத்தாமலிங்கு
சேர்வாரோ கன்னைகளாய்

தொட்டில்ப் பழக்கம் சுடுகாடு
வரையென்று சொல்லிவைத்த
பட்டப் பெரியோரே இவர்
புலம்பெயர்ந்து வந்ததனால்
கட்டான பெருமொழியை
கிடப்பில் விட்டுவிட்டு
தொட்டில்ப் பழக்கம் தொலைந்தது
கப்பலுடன் என்கின்றனரே

எமக்கென்றொரு பண்பாடு
அன்றிருந்து இருக்குமிடத்து
எமக்கெதற்கு அதுவென்று
ஏன்தான் எண்ணவேண்டும்
மிடுக்காமே அடம்பன் கொடியும்
திரண்டால் என்பதுணர்ந்து
அடுத்த அடியைப் பலமாய்ப்
பதிப்போம் நட்பு நிலைத்திருக்க.

www.tamilarangam.net

# ஓர் இடையீடு....

'விழுது' தன் நீண்ட பயணத்தின் இடையில்
இப்போது இலக்கியத்தையும் தன்னோடு
இணைத்துக்கொண்டு விட்டதற்கான
சாட்சியமாகவோ அல்லது விழுந்து
கொண்டிருக்கும் இலக்கிய மதிப்பீடுகளைத்
தூக்கி நிறுத்தும் தார்மீக பலத்தின்
அடிப்படையாகவோ
இச் சஞ்சிகை வெளிவருகின்றதென்று நாம்
ஒருபோதும் சொல்லிக்கொள்ளப்போவதில்லை.
மேலும் இது பத்தொடு பதினொன்றாக நிச்சயம்
இருக்காது என்று நாம்
மார்தட்டிக்கொள்ளப்போவதும் இல்லை.

ஒன்றை புதிதாக முயன்று பார்ப்பதில்
தவறொன்றும் இல்லைத்தானே.

ஆனால் அம் முயற்சியோ தனக்கும் மற்றவர்க்கும்
பயனுள்ளதாயிருத்தல் வேண்டுமல்லவா.

எனவே இத்தகையதோர் மனோநிலையினை
இச்சஞ்சிகை வெளிவருதலுக்குரிய குறைந்த பட்ச
அடிப்படையாகக் கொள்ளலாம் என்பது எம்
தாழ்மையான எண்ணம்.

'விழுது' சஞ்சிகை, கரும்பலகையல்ல;
கண்ணாடி.

நம்மை நாமே பார்த்துக் கொள்வோம்.

பாதித்தவைகளை பகிர்ந்து கொள்வோம்.

அவ்வளவே.

ஆசிரியர் : பா. சுதாகரன்

ஓவியங்கள்: சுது

வடிவமைப்பு: ராகவித்ரா

நிர்வாகத் தொடர்புகளுக்கு:

Association VILUTHU
Rajaratnam Chandrathas
64 rue de Colombes
92600 Asnieres sur Seine
FRANCE.

phone: 06 09 62 50 28
01 47 90 44 72

இணையத்தளம்:
www.viluthuart.com

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்